


# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -364






## 35 ஊடகவியலாளர்களை படுகொலை செய்த கடந்த கால அரசு - மீண்டும் ஊடகவியலாளர்கள் மீது வன்முறை!



## மாவீரர் தினத்தை தடை செய்ய கோரும் சரத்பொன்சேகா – யார் பயங்கரவாதிகள்



## நாட்டின் ஜனாதிபதியை கொத்தடிமையாக பயன்படுத்தும் சீனா!



# 35 ஊடகவியலாளர்களை படுகொலை செய்த கடந்த கால அரசு - மீண்டும் ஊடகவியலாளர் மீது வன்முறை!

இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஒரு நாட்டின் முதுகெலும்பாக செயற்படுகின்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றமை தாக்கப் படுகின்றமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாததொன்று. இவ்வாறு ஒரு சூழ்நிலையில் யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், இந்த நாட்டில் ஊடகவியலாளருக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. கடந்த மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மாத்திரம் 35 ஊடகவியலாளர்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கான விசாரணைகள் கூட இதுவரை முறையாக முன்னெடுக்கப்படவில்லை.

தராக்கி என்று அழைக்கப்படும் ஊடகவியலாளர் சிவராம், இவரின் கொலை தொடர்பாக குறித்த சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆதாரங்கள் இருந்தும் அரசு அவரை விடுதலை செய்தது. இதேபோன்று ஊடக நிறுவனங்களில் பணிபுரிந்த முன்னணி ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.


இன்றைய கால சூழ்நிலையில் முள்ளிவாய்க்கால் பெயர் ப்பலகையை படம்பிடிக்கச் சென்ற ஊடகவியலாளர் விஸ்வா இராணுவத்தினரால் அண்மையில் தாக்கப்பட்டிருக்கின்றார். இது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது தாக்கிய இராணுவத்தினர் மன்னிப்பு கோரியதன் அடிப்படையில் குறித்த விசாரணைகள் முடக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் நீதிக்குப் புறம்பான செயற்பாடு. இதேநேரம் குறித்த ஊடகவியலாளரின் உயிருக்கு ஆபத்து நேரிடுமாகவிருந்தால் மன்னிப்புக் கேட்டு எவ்வித பயனுமில்லை. குறித்த ஊடகவியலாளர் தனது சுய பாதுகாப்பு கருதி இவ்வாறானதொரு நிலைப்பாட்டிற்கு வந்திருக்கின்றார் என்பதே இன்றைய அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலின் வெளிப்பாடு.

தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தலை இவ் வரசாங்கம் தொடருமாகவிருந்தால் சர்வதேச நீதிமன்றிற்கு இவ்விடயம் கொண்டுசெல்லப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இவ்வரசாங்கம் தாம் நினைத்தபடி இந்த ஆட்சியல் தமிழினத்தை அடக்கியொடுக்கின்ற, வடகிழக்கினை இணைக்காமல், ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற செயலணியின் ஊடாக மாற்றங்களை கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதனைத் தட்டிக்கேட்கும் ஊடகவியலாளர்களின் குரல்வளைகள் நசுக்கப்படுகின்றன. முன்னணி ஊடகத்துறையில் பணிபுரிந்தோர் பல நாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்றிருக்கின்றார்கள். தற்போது சமாதான சூழல் என்று கூறுகின்ற அரசாங்கம் இறந்த ஊடகவியலாளர்களுக்கான நஸ்ட ஈட்டையோ இல்லது அவர்கள் மீதான விசாரணையையோ முன்னெடுக்கவில்லை.

சர்வாதிகாரத்தினை பயன்படுத்தி ஊடகவியலாளர்களின் ஊடக சுதந்திரத்தை பறிப்பது மட்டுமன்றி ஊடக நிறுவனங்கள் பலவற்றையும் விலைகொடுத்து வாங்கியுள்ளார்கள். இதனால் தமிழ் ஊடகப்பரப்பு தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற அடிப்படையில், தமிழர் சார்ந்த செய்திகளை கொண்டுசெல்ல முடியாத ஒரு நிலைமை உருவாகியுள்ளது. தமிழ் சாரந்த ஊடக நிறுவனங்களும் தமிழ் அரசியல்வாதிகளை பிழையான கோணத்தில் அல்லது அரச நிகழ்ச்சி நிரலுக்கேற்ப கொண்டுசெல்கிறது. இலங்கையில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்கள், குறித்த ஊடக நிறுவனங்கள் ஊடக வியலாளர்களுக்கு பிரச்சினைகள் வருகின்றபோது அதனை ஏனோ தானோ என தட்டிக்கழிக்கின்றார்கள். இவர்கள் தமது ஊடக நிறுவனத்தில் பணிபுரியவில்லை. நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என காரணம் கூறுகிறார்கள். இதனால் குறித்த ஊடகவியலாளர்கள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்காத வகையில், தமக்கு ஆதரவாக தமிழ் ஊடகவியலாளர்கள் செயற்படவேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. யுத்த காலங்களில் போரை முடிவுக்குக்கொண்டு வர முடியாத சூழல் ஏற்படுகிற போது சர்வதேச பூகோள இராணுவ உத்திகளுடன் முதலாவதாக ஊடக அடக்குமுறையை அரசாங்கம் ஏற்படுத்தது. ஈழப்போரின் இறுதியில் கொத்துக்கொத்தாக மக்கள் பலியாகினர். பொது இடங்களில் தஞ்சமடைந்த மக்களைக் கொன்றார்கள். இவை தொடர்பான செய்திகளை சர்வதேச நீதிமன்றிற்கும் ஐ.நாவுக்கும் வழங்கிய ஊடகவியலாளகர்களை கடந்த கால ஆட்சியில் கொலை செய்தார்கள். பலர் நாட்டைவிட்டுத் தப்பியோடினார்கள்.

தற்போது ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதன் பிரதான நோக்கம் இலங்கையில் இடம்பெறுகிற மறைமுகமான இனவழிப்பு நடவடிக்கைகளை




சர்வதேச நாடுகளுக்கு எடுத்துச்செல்வதேயாகும்.

குறிப்பாக இறந்த பொதுமக்கள் மற்றும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாது என இவ்வரசினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2000-2005 வரையிலும் இலங்கை அரசாங்கம் விடுதலைப்புல்களுடன் இடைக்கால நிர்வாகம் என்ற ரீதியில் சமாதானப் பேச்சுக்களை நிகழ்த்தியது. இதில் இராணுவத்தரப்பும் விடுதலைப்புலிகளும் ஒன்றிணைந்து அக்காலகட்டத்தில் செயற்பட்டனர்.

தற்போதைய இராணுவத்தளபதி சவேந்திர டி சில்வா அப்போதைய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா உட்பட முக்கிய தளபதிகளும் விடுதலைப்புலிகளது முக்கிய தளபதிகளான பானு, தீபன், சசிமாஸ்ரர் ஆகியோரும் கைலாகு கொடுத்து வரவேற்ற படங்கள் ஆவணங்களாக இருக்கிறது. அதுமட்டுமன்றி இலங்கைக்கு 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் வந்திறங்கிய போது குறித்த இந்தியப் படைகளை இலங்கையில் இருந்து விரட்டுவற்கு பிரேமதாசா தலைமையிலேயே வெடிபொருட்கள், துப்பாக்கிகள், மருந்துப் பொருட்கள், வாகனங்கள், பணம் அனைத்தும் வழங்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளை இந்தியாவிற்கு எதிரானவர்கள் என இலங்கையரசு முத்திரை குத்தியது.

அதன் விளைவே ராஜிவ்காந்தி அவர்கள் விடுதலைப்புலிகளால் கொலை செய்யப்படவும், நிரந்தமான பகைமையை தமிழ் மக்களிடத்தில் குறித்த அரசாங்கமே ஏற்படுத்தியது. அப்போது விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று தெரியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவினது கணவர் விஜயகுமாரணதுங்க, அக் காலகட்டத்தில் விடுதலைப்புலிகளை கோட்டையில் வைத்து நேரடியாகச் சந்தித்தார். குறிப்பாக இலங்கைக்கு அமைதிப்படை என வந்த இந்திய இராணுவம் அகோரப்படையாக மாறியது. ஆகவே தமக்கு ஏற்றவாறு அரசு தமிழினத்தையும் விடுதலைப்புலிகளையும் பயன் படுத்திவிட்டு இன்று பயங்கரவாதிகள் என்கிற முத்திரையை தமிழினத்தின் மீதும், விடுதலைப்புலிகள் மீதும், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் குத்தப்பார்க்கிறது.

தமிழ் ஊடகப்பரப்பின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் ஊடாகவே வடகிழக்கில் ஊடகக் கட்டுமானங்களை வளர்த்துக்கொள்ளலாம்.

தமிழ் ஊடக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ் மக்களின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன், கலை கலாச்சார நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதுடன், தென்னிந்திய பாடல்களுக்கும் திரைப்படங்களுக்கும் முக்கியத்துவம் வழங்குவதுபோன்று இலங்கையில் வளர்ந்துவருகின்ற கலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் ஊடாகவும் தமிழினத்தின் இருப்பை வலுப்படுத்தலாம்.

மீண்டும் ஒரு போர் சூழல் இலங்கையில் உருவாகுமானால் சர்வதேச நாடுகள் இந்த நாட்டிற்குள் படையெடுக்கும் நிலை உருவாகும். உள்ளூர் பிரச்சினைகளை நாங்களே எமக்குள் தீர்த்துக்கொள்வோம் என்கிறது அரசு. ஆனால் அதற்கான திருப்திகரமான வேலைத்திட்டங்கள் முழுமையான ஆரம்பிக்கப்படவில்லை. அரசின் அனைத்து செயற்பாடுகளும் வெறும் கண்துடைப்பேயாகும். புதிய ஜனாதிபதியின் ஆட்சி இரண்டு ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் இதுவரை அவர் தமிழ்த் தரப்புடன் பேசவில்லை. ஆகவே இவர்கள் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கப் போவதில்லை என்பதே உண்மை நிலை.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## வேகமாகப் பரவிவரும் ஒமிக்ரோன்

உலகமெங்கும் பரவி உயிரிழப்புக்களை வேகமாக ஏற்படுத்தி வரும் கொவிட் வைரசால் நாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகளை தத்தம் நாட்டு மக்களுக்கு செலுத்திவரும் நிலையில், கொவிட் வைரஸ் உருமாற்றமடைந்து பல திரிபுகளாக பரவி வருகிறது. மிகவும் ஆபத்தான வைரசாக இனங்காணப்பட்டுள்ள இவ் வைரஸ் இன்று புதிதாக ஒமிக்ரோன் என்கிற பெயருடன் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதிலும், அது ஐரோப்பிய நாடுகளை வேகமாகத் தாக்கி வருகிறது.

அதனை விட ஆசிய நாடுகளையும் தாக்கத் தொடங்கியுள்ளது. இவ் வைரஸ் தொற்றுடன் பலர் ஆங்காங்கு அடையாளம் காணப்பட்டு வருகின்ற போதிலும் ஒருவர் இதுவரை இவ் வைரசினால் மரணமும் அடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று உலகளவில் கொவிட் வைரசினால் அமெரிக்கா வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களை விட தற்போது அதிகரித்துள்ளது.

முன்னெப்போதும் காணாத வேகத்தில் ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு உலகெங்கும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதிக எண்ணிக்கையான மரபணு பிறழ்வைக் கொண்ட இந்தத் திரிபு தற்போது 77 நாடுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த திரிபை கட்டுப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கைகள்எடுக்கப்படாததுபற்றிமருத்துவர் டெட்ரோஸ் கவலை தெரிவித்துள்ளார். 41 நாடுகள் தமது மக்கள் தொகையில் இன்னும் 10 வீதமானவர்களுக்குக் கூட தடுப்பூசி வழங்க முடியாத நிலையில் இருப்பதோடு 98 நாடுகள் இன்னும் 40 வீதத்தைக் கூட எட்டவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் உலக நாடுகள் மீண்டும் பயணத்தடைகளை அமுல்படுத்தியுள்ளதுடன் தமது நாட்டு மக்களை மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வலியுறுத்தி வருகின்றன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டுள்ளன. தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு செல்பவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றபோதிலும் கடுமையான சுகாதார நடைமுறைகள் அந்தந்த நாடுகளில் பின்பற்றப்படுகின்றன.

இலங்கையிலும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றியுள்ள 3நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கொவிட் வைரசின் தாக்கத்தின் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அரசு அறிவித்துள்ள நிலையில், இன்று நாடு அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தாலும், பொருட்களின் தட்டுப்பாட்டாலும், போராட்டங்களாலும், அரசியல் ரீதியான குளறுபடிகளாலும் திக்குமுக்காடி வரும் நிலையில், இளையவர்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்காக செல்லும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனவே, வந்திருக்கும் புதிய திரிபான ஒமிக்ரோனிலிருந்து நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டிய கடப்பாட்டில் அரசு இருப்பதுடன், மேலும் பல புதிய புதிய திரிபுகள் எதிர்காலத்தில் இனங்காணப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதால், கடந்த காலங்களைவிட இனிவரும் நாட்களில் கடுமையான சுகாதார நடைமுறைகள் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டும். மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்தும் அக்கறை கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை இவ் இக்கட்டான சூழலில் அரசு முன்னெடுக்கவேண்டும்.

## 169 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



மக்கள் வாழ்விடத்திற்கான பாதை நெடுகிலும் பதுங்கித் தாக்குதற்காரர்களை வைத்திருக்கவேண்டும். சாத்தியம் .ருக்குமானால், மக்கள் வாழ்விடத்திற்கான பிரதான பாதைகளில் கண்ணியும் வைக்கலாம். எதிரி தாக்குகின்ற சமயத்தில் பின்வாங்குவதற்கென, மிகவும் வசதியான பின்வாங்கல் பாதைகளும் ஒன்றுசேரும் நிலையும் முற்கூட்டியே நியமிக்கப்பட்டிருக்கவேண்டும்.

படைப்பிரிவிலுள்ளஒவ்வொருகெரில்லாவும் .வற்றைத் தெரிந்திருக்கவேண்டும்.

கெரில்லாக்களுடன் கூடுதலாகச் சமரிடும் பாசிச சமர்க் கட்டமைப்புக்கள் யாதெனில், கொம்பனிகளும் பிளாட்டூன்களுமாகும். அவர்கள் கனரக இயந்திரச் சுடுகலன்களையும் எறிகணை செலுத்திகளையும் ஆயுதமாகக் கொண்டுள்ளார்கள். அநேகமாக, அவர்கள் மிதிவண்டிகளிலும் உந்துருளிகளிலும் வாகனங்களிலும் நகர்வை மேற்கொள்கின்றார்கள். வசதியற்ற பாதைகளைக் கொண்டிருக்கின்ற, நீர்நிலைகளின் மத்தியிலுள்ள தீவுகளில் கெரில்லாக்கள் தங்கியிருக்கின்றபோது, ஜேர்மனியர்கள் எறிகணை செலுத்திகளைக் கூடுதலாகப் பயன்படுத்துகின்றனர். பாசிஸ்டுக்களின் சிறிய படைப்பிரிவுகள் தேடுதலை மேற்கொள்வதற்காகத் தங்களுடன் நாய்களையும் கூட்டிச் செல்கின்றார்கள். இவற்றைக் கருத்திற்கொண்டு, கெரில்லாக்கள் தங்கியிருக்கின்ற நிலைகளில் எதிரியின் எறிகணைத் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காகப் பதுங்குகுழிகளையும் சாத்தியத்தைப் பொறுத்து மண்ணாலும் மரத்தினாலுமான காப்புக்களையும் உருவாக்கவேண்டும்.

அத்துடன், நாய்களின் உதவியுடன் தேடுதலை மேற்கொள்பவர்களுக்கு இடையூறு செய்யும் விதத்தில், சிறப்புப் பதார்த்தப் பொருட்களைத் தமது தடயங்களுக்கு அவசியம் தூவிவிடவேண்டும். காட்டுப் பிரதேசத்தில் இருக்கின்றபோது, தரையிலிருந்து அவதானிப்பவர்களைத் தவிர, மரத்திலிருந்து அவதானிப்பை மேற்கொள்பவர்களையும் கெரில்லாக்கள் நியமித்து வைத்திருக்கவேண்டும். கெரில்லாக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஜேர்மனியர்கள் ஒரேயொரு முறையிலான சமரையே - முன்னேறித் தாக்குதலையே - ஏற்றுக்கொள்கின்றனர். தற்காப்பு நடவடிக்கைக்குச் செல்லுதலை அவர்கள் மிகவும் விரும்பத்தகாத விடயமாகக் கருதுகின்றார்கள். முன்னேறித் தாக்குதல் வெற்றிகரமாக அமையாவிட்டால், அவர்கள் சமரை நிறுத்தவிட்டுப் பின்வாங்கத் தொடங்குகின்றார்கள். ஆகவேதான், கெரில்லாக்கள் எப்பொழுதும் எதிரிமீது தமது முன்முயற்சியைத் திடமாக வெளிப்படுத்தி, எதிரியை அதற்குள் அகப்பட நிர்ப்பந்திக்கவேண்டும். குறுகிய நேரத் தாக்குதல் எதுவித வெற்றியையும் உடனே தரவில்லையெனில், கெரில்லாக்கள் வேகமாக எதிரியிடமிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, சாத்தியத்தைப் பொறுத்து எதிரிக்குத் தெரியாத திசையில் பின்வாங்கிச் செல்லவேண்டும்.

சமரிலிருந்து வெளியேறிச் சென்றதும் கெரில்லாக்கள் தமது ஒழுங்கமைப்பைச் சீர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும். அத்துடன், இடைக்காலத்திற்குப் பிறிதொரு பிரதேசத்திற்குச் சென்று தங்கவும் வேண்டும். இதற்காக வெவ்வேறு இடங்களில் அவசரகாலத்திற்கான உணவுப்பொருட் சேமிப்புக்களை அவசியம் வைத்திருக்கவேண்டும். இவை குறைந்தது பிறிதொரு பிரதேசத்திற்குச் செல்லும் காலம் வரையாவது போதுமானதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு கெரில்லாப் படைப்பிரிவும் அருகிலுள்ள பிரதேசங்களிலிருக்கின்ற படைப்பிரிவுகளுடன்தொடர்பைப்பேணவும் வேண்டும். படைப்பிரிவு தமது செயற்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இடைக்காலத்திற்கு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளபோது, இத்தொடர்பு பிற படைப்பிரிவிடமிருந்து உணவுப்பொருட்களையும் உதவியையும் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. குறித்த பிரதேசங்களிலிருந்து கெரில்லாக்களைத் துடைத்தெடுப்பதற்காக ஜேர்மனியர்கள் கூடியளவான படை நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார்கள்.

இவ்வாறான சமயங்களில் படைநகர்வில் பற்றாலியனுக்குக் கூடிய எண்ணிக்கை கொண்ட படைப்பிரிவு பங்கெடுக்கின்றது. வழக்கமாகப் பற்றாலியனுக்கு வீதியின் இரு மருங்கிலும் 20 கி.மீ நகர்வு மேற்கொள்ளப்படுகின்றது. கெரில்லாக்கள் எச்சரிக்கை யடையாமலிருப்பதற்காக வேவு மேற்கொள்ளப்படுவதில்லை.

ஆனால் எவ்பொழுதும் நெருக்கமான தற்காப்பமைப்புக் கொண்டிருக்கப்படுகின்றது. நகர்வின்போது எதிர்ப்படுகின்ற மக்கள் வாழ்விடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தனியான கட்டடங்கள் தேடுதலுக்கும் உள்ளாக்கப்படுகின்றன. போதுமானளவு காலம் இருக்கின்றபோது, ஒவ்வொரு பெரிய கிராமங்களிலும்மக்களுடனானபணிகளை மேற்கொள்வதற்காக பாசிஸ்டுக்கள் 2 - 3 நாட்கள் தங்கி நிற்கின்றார்கள். சகல வகையான கொடூர உத்திகள், பொதுமக்களை அச்சத்திற்குள்ளாக்கல், சிலவேளைகளில் கைக்கூலி கொடுத்தல் போன்ற செயற்பாடுகளால் பாசிஸ்டுக்கள் கெரில்லாக்களைப் பற்றி ஏதேனும் தகவல் பெற முயற்சிக்கின்றனர். ஜேர்மனியர்களின் பிரதான படைகள் வழித்தங்கலை அல்லது நிறுத்தத்தைச் செய்துள்ள நிலையில் நடமாடும் படைப்பிரிவு அவர்கள் கடந்துவந்த கிராமங்களுக்குச் செல்கின்றது. ஏனெனில் கெரில்லாக்களும் மக்களும் அங்கே பாசிஸ்டுக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு எவ்வாறு எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளனர் என்பதை அறிவதற்காகவாகும். துண்டனையளிக்கும் படை நடவடிக்கைகளுக்காக முழுப் பற்றாலியனை அனுப்புகின்றபோது, ஜேர்மனியர்கள் பெரிய காட்டுப் பிரதேசங்களைச் சோதனையிடுவது சாத்தியமில்லை எனக் கருதுகின்றனர்.

ஏனெனில், இதற்கு மிகக் கூடுதலான அளவு படைகள் தேவைப்படுகின்றதுடன், பாரிய ஆபத்தையும் கொண்டதாக இருக்கின்றது. பாசிஸ்டுக்கள் பெரிய காடுகளைக் கண்டு அஞ்சுகின்றார்கள். ஒழுங்கமைக்கப்பட்ட அவதானமான வேவை மேற்கொண்டு, கெரில்லாக்கள் இலகுவாக இவ்வாறான வகை நடவடிக்கைகளை இனங்காணலாம்.

அத்துடன், பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கான போதிய கால அவகாசமும் கிடைக்கின்றது. கெரில்லாக்களிடம் போதுமானளவு படைகளிருந்தால், அவர்கள் தனியான ஜேர்மனியப் படைப்பிரிவுகளைத் தாக்கி, அவற்றை அழிக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் முற்கூட்டியே பதுங்கித் தாக்குதலுக்கு அவசியம் தயார்ப்படுத்தவேண்டும். அல்லது இடைக்காலத்திற்கு அந்தப் பிரதேசத்திலிருந்து பின்வாங்கும் முடிவையேனும் எடுக்கவேண்டும்.

கெரில்லாப் படைப்பிரிவுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக ஜேர்மனியர்கள் விமானப்படை விமானங்களையும் பயன்படுத்துகின்றனர். ஆவர்களது விமானங்கள் மெதுவாக, பிரதேசங்களுக்கு மேலால் தாழப்பறந்து, அவற்றை அவதானமாக ஆராய்கின்றன. அத்துடன், வீதியில் நடைபெறும் போக்குவரத்து, தெரிகின்ற நெருப்புக்கள், புகைகள் போன்றவறானவற்றையும் கண்காணிக்கின்றன.

தொடர்வான்....
நெற்றிபொறியன்

# மாவீரர் தினத்தை தடை செய்ய கோரும் சரத்பொன்சேகா – யார் பயங்கரவாதிகள்

மாவீரர் தின அனுஷ்டிப்பை இலங்கை தடை செய்ய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வலியுறுத்தினார். மேலும். அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். நாடாளுமன்றில் அன்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர். 2 ஆயிரத்து 500 விடுதலைப் புலிகள் 75 ஆயிரம் இந்திய இராணுவத்தையே தோற்கடித்தார்கள் என்றும் தெரிவித்தார். இதன் போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர். “யுத்தம் இல்லாத இந்த சூழ்நிலையில். இராணுவத்திற்கு ஏன் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என சில தரப்பினர் இங்கு குறிப்பிடுகிறார்கள்.

ஆனால். ஒருநாட்டில்யுத்தம்இருந்தாலும் இல்லாவிட்டாலும் இராணுவக் கட்டமைப்பு பலமானதாக இருக்க வேண்டும். தேசிய ரீதியாக அச்சுறுத்தல் இல்லாவிட்டால்கூட சர்வதேச ரீதியாக வரும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில். இராணுவம் தயார் நிலையிலேயே இருக்க வேண்டும். நாம் அஞ்சிக்கொண்டு வாழ வேண்டியத் தேவையில்லை. 80 களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் 2500 பேரளவிலேயே இருந்தார்கள். இதன்போது 75 ஆயிரம் இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வந்தார்கள். ஆனால். விடுதலைப் புலிகள் அவ்வளவு குறைவான ஆட்களை வைத்து இந்திய இராணுவத்தையே தோற்கடித்தார்கள். இதுதொடர்பாக இலங்கையர் என்று நாம் பெருமையாகக்கூட கருத முடியும். எனவே. சிறிய நாடு என்று நாம் எவருக்கும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஒரு நாட்டின் பாதுகாப்பு பலவீனப்பட்டால். பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. 90 களில் எமது இராணுவத்தில் 70 ஆயிரம் இராணுவத்தினரே இருந்தார்கள். இராணுவம் ஆட்பலத்தில் பலவீனமாக இருந்த காரணத்தினால்தான் யுத்தம் நீடித்தது. அன்று எமக்கு 90 ஆயிரம் இராணுவத்தினர் இருந்திருந்தால். அன்றே யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். கொழும்பு மாவட்டத்தைப் போன்ற பரப்பளவில் சிறிய நாடான சிங்கப்பூர். தமது நாட்டின் பாதுகாப்புக்கென அவுஸ்ரேலியா. வியட்நாம். தாய்லாந்தை விட அதிக நிதியை ஒதுக்குகிறது. பாதுகாப்பு அமைச்சுக்கென 30 பில்லியன் ரூபாய் இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும். இதனை மேலும் பலப்படுத்த வேண்டும் என்பது தான் எமது கருத்தாகும். ஆட் பலம். ஆயுத பலம் இன்னும் பலமடைய வேண்டும். அத்தோடு. இன்று மாவீரர் நினைவு தொடர்பாக ஒரு கருத்தைக் கூறியே ஆகவேண்டும். இதனை கட்டாயமாக நாட்டில் தடைசெய்தே ஆக வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் எமது கட்சியின் நிலைப்பாடும் இதுவே. இவர்களின் அனுமதியுடன்தான் நான் இந்தக் கருத்தை முன்வைக்கிறேன்.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளர். கடந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தின்போது. மாவீரர் தினம் அனுஷ்டிக்கும் ஒரு நாட்டில் வாழ்வது சாபத்துக்குரியது என கண்ணீர் மல்கப் பேசியது எனக்கு நினைவில் உள்ளது. எனவே. மாவீரர் நினைவு நாளை நாம் தடை செய்தே ஆக வேண்டும். இதுதொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் தீவிரமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். இதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது. எனவே. இதற்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும். **யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவுகூருவது எமக்கு பிரச்சினையல்ல. ஆனால், அதற்காக பிரபாகரனின் பிறந்த நாளை தெரிவு செய்வது தான் பிரச்சினைக்குரியதாகும்** பிரபாகரனை அவரது உறவினர்கள் நினைவுகூரிக் கொள்ளட்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது தடை செய்யப்பட்ட அமைப்பாகும். எனவே. இதன் உறுப்பினர்களை நினைவுக்கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். மாவீரர் நினைவு நாளும். ஜே.வி.பியின் நினைவு நாளும் சமமானது கிடையாது. ஜே.வி.பி. இந்நாட்டின் அரசியல் கிளர்ச்சியொன்றை மேற்கொள்ளவே முற்பட்டார்கள். இதற்காக ஆயுதம் ஏந்திய காரணத்தினால்தான் அரசாங்கம் அவர்களை கட்டுப்படுத்தியது. மாறாக. விடுதலைப் புலிகள் போன்று ஒரு நாட்டை இரண்டாக பிளவடைய வைக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணம் கிடையாது. அல்லது ஒரு இனத்தை இலக்கு வைத்து அவர்கள் தாக்குதல் நடத்தவில்லை. இன்று கூட விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் வெளிநாடுகளில் இருந்துகொண்டு புலிக்கொடியுடன் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கிறார்கள். தங்களின் நோக்கத்திற்காக இன்னமும் வெளிநாடுகளில் இருந்து செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே. ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும் ஒன்று கிடையாது. நாம் வடக்கு அரசியல்வாதிகளுடன் மிகவும் நட்பாக இருக்கிறோம். அவர்களுக்கும் எமக்கும் நெருங்கியத் தொடர்பு காணப்படுகிறது.

ஆனால். ஒரு சில வடக்கு அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் நோக்கத்திற்காகவே. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இதன் மூலம் மீண்டும் தெற்கு மக்கள் மனங்களில் கோபத்தை விதைக்கவே இவர்கள் முற்படுகிறார்கள். இதனை செய்ய வேண்டாம் என நான் கேட்டுக் கொள்கிறேன். ரஜீவ் காந்தி. ரணசிங்க பிரேமதாஸ. ரஞ்சன் விஜயரத்ன போன்ற அரசியல் தலைவர்களை கொன்றவர்களை. தேரர்களை பேரூந்தில் வைத்து படுகொலை செய்தவர்களை. தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தியர்களை.



ஸ்ரீமா போதி மீது தாக்குதல் நடத்தியவர்களை. காத்தான்குடி பள்ளியில் முஸ்லிம்களை கொலை செய்தவர்களை. அமிர்தலிங்கத்தை கொலை செய்தவர்களை. கிராமங்களுக்குள் புகுந்து பொது மக்களை கொலை செய்தவர்களையே மாவீரர் தினத்தின் ஊடாக நினைவுகூர முற்படுகிறார்கள். இவ்வாறானவர்களை நினைவுகூர அனுமதிக்கும் அளவுக்கு நாம் கீழ்மட்டத்துக்கு செல்லவில்லை. அத்தோடு. அரசியல்கைதிகளை விடுதலை செய்வதை நாம் முழுமையாக வரவேற்கிறோம். அப்படியாயின். என்னைக் கொலை செய்ய குண்டுகளைக் கொண்டு வந்த மொரிஸ் என்பவரை முதலில் விடுதலை செய்ய வேண்டும் என நான் அரசாங்கத்திடம் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் கூறிய முன்னாள் இராணுவத்தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சரத்பொன்சேகா ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது புலித்தேவன் தீபன் மற்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையின் பொறுப்பாளர்களையும் சரத்பொன்சேகாவின் தலைமையில் பரஸ்பரம் ஒரு இடைக்கால நிர்வாகம் அரசினால் வழங்கப்பட்டு விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைகளை வடகிழக்கில் செய்வதற்கு அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது. 14 கட்ட உள்ளூர். 07 சர்வதேச பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றது. இதில் உத்தியோகபுர்வமாக ஜி.எல். பீரிஸ். மிலிந்த மொறகொட. நிமால் சிறிபால டி சில்வா என பலர் அன்று ஒஸ்லோ தொடக்கம் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டிருந்தனர். 70 ஆண்டுகாலங்களாக இப்பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியாத இலங்கையரசு மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் குழப்பங்களை விளைவித்துக் கொண்டேயிருந்தார்கள். குறிப்பாக இதுவரையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரங்களைப் பாரக்கின்றபோது

**01. ஜேம்ஜ் பீரிஸ் சமரவிக்ரம அருணாச்சலம் 1918 ஒப்பந்தம்**
**02. மகேந்திரா ஒப்பந்தம் 1921**
**03. பண்டா – செல்வா ஒப்பந்தம் 1957**
**04. டட்லி – செல்வா ஒப்பந்தம் 1965**
**05. மாவட்ட சபைகள் வெள்ளை அறிக்கை 1968**
**06. இணைப்பு ஊ திட்டம் 1983**
**07. திம்பு பேச்சுவார்த்தை 1985**
**08. இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987**
**09. பிரேமதாசா புலிகள் பேச்சுவார்த்தை 1989-1990**
**10.சந்திரிக்கா புலிகள் பேச்சுவார்த்தை 1984-95**
**11.சந்திரிக்கா ரணில் மஹிந்த புலிகள் பேச்சுவார்த்தை 2000-2006**

இதில் 11 முக்கிய பேச்சுவார்த்தை ஒப்பந்தங்கள் எட்டப்பட்டன. ஒரு பயங்கரவாத அமைப்போடு இத்தனை பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவேண்டியதன் அவசியம் இல்லை. 1987 காலப்பகுதிகளில் இந்திய இராணுவம் இலங்கை வந்திறங்கிய போது 75000 இராணுவப்படைகளுடன் 2500 விடுதலைப்புலிகள் மாத்திரமே போரிட்டதாக கூறும் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா. இந்தியாவுக்கு எதிரானப் போராட்டத்தை ஜே.ஆர் பிரேமதாசா தலைமையிலான ஆடசியாளர்களே விடுதலைப்புலிகளுக்கு ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் வெடிமருந்துகள் ரவைகள் மருத்துவப்பொருட்கள் வாகனங்கள் எனப் பல்வேறான ஆயுதத்தளபாடங்களையும் வழங்கி இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து விரட்டியடிப்பதறக்கான அனைத்து விதமான ஆதரவினையினையும் வழங்கியிருந்தார்.

இந்திய இராணுவத்தை வெளியேற்றினால் வடக்கு கிழக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதாக ரணசிங்க பிரேமதாசா அறிவித்திருந்தார். இறுதியில் தியாகி திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தின் ஊடாக காந்தியத்தின் கொள்கையைக் கடைப்பிடித்த பாரதசேதம் என்ற வகையில் அதற்கு மதிப்பளித்து இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியது. அதன் பின்னர் மீண்டும் போர் இந்நாட்டில் ஆரம்பித்தது.

11ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

# நாட்டின் ஜனாதிபதியை கொத்தடிமையாகப் பயன்படுத்தும் சீனா!



இலங்கை வரலாற்றில் ஆட்சிசெய்த ஆட்சியாளர்களுக்குள் மஹிந்த குடும்பம் ஒரு வேறுபட்ட ஒரு மாற்று சிந்தனையைக் கொண்டது. அந்த அடிப்படையில் பூகோள அரசியலின் நிலைமையின் படி நாடுகளின் உதவியினைப் பெற்று போரை முடிவுக்குக்கொண்டு வந்த இலங்கை அரசாங்கம் சீனாவின் பொறிக்குள் சிக்கிய விடயம் என்பது ஆச்சரியமானது மட்டுமன்றி இந்த நாட்டின் இறையாண்மை பாதிக்கப்பட்டு இந்த நாடு கடன் சுமையின் மேல் கடனாகி இன்று அதிலிருந்து மீள முடியாத ஒரு நிலையினைக் கண்டுள்ளது. இதற்கிடையில் இந்த சீனாவின் அடிமைத்தனத்தில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது தொடர்பில் அரச தரப்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

அதேநேரம் முன்னாள் பிரதர் ரணில் அவர்களை மீண்டும் பிரதமராக்குவதன் ஊடாக உலக வல்லரசு நாடுகளுடன் ஒரு அணுகுமுறையினை ஏற்படுத்திக்கொண்டு சீனாவின் பிடியில் இருந்து மீள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று தற்போதைய அரச தரப்பு கருதுகிறது. இதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளும் இடம்பெற்றுவரும் நிலையில், சீனா ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தன்னை ஒரு வலுவான போர் தந்திரோபாயமிக்க நாடாக பலப்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை உள்ளது.

ஆகவே இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள், முக்கிய துறைமுக நகரங்கள் இவ்விரண்டினையும் தன்வசப்படுத்திக்கொண்டால் உலக யுத்தங்கள் இடம்பெற்றாலும் அதனைத் தாங்கிப்பிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கையில் இருந்து மேற்கொள்ள முடியும் என்பதே இவர்களின் நிலைப்பாடு. இலங்கை ஓர் தீவு என்பதனால் இந்த 65610 சதுர கிலோ மீற்றரைச் சுற்றியுள்ள பாதுகாப்பு எல்லைகளை நிறுவி இங்கிருந்து தாக்குதலை நடத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாடும் கூட. ஆகவே எந்தவிதத்தில் இலங்கையை அணுகிக்கொள்ள முடியும் என்கின்ற ஒரு நிலைப்பாட்டினை எடுத்த சீனா,

இந்தஇலங்கைத்தீவில்தெரிவுசெய்ததுஇந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதியையும், தற்போதைய பிரதமரையும் தான். இவர்கள் ஊடாக தன்னுடைய பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்வதோடு வலுவானதொரு இராணுவக் கட்டமைப்பினையும் ஏற்படுத்திக்கொண்டு இந்த நாட்டை கடன் சுமையில் ஆழ்த்தி தமது பிடிக்குள் வைத்திருக்க முடியும் என்பதே இவர்களின் நிலைப்பாடு. சீனா நாட்டின் உற்பத்திகளை இலங்கையில் கொண்டுவருவதன் ஊடாக அவர்களின் பொருளாதாரத்தையும் வளர்த்துக்கொள்வதோடு தற்போதைய சந்தையில் இருக்கக்கூடிய இந்தியாவின் பொருட்களை சந்தையில் இருந்து எடுத்து இல்லாமல் செய்வது இவர்களின் பெரும் திட்டம். அந்த அடிப்படையல் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களும் தற்போது தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

படிப்படியாக சீனாவின் வானொலிகள், தொலைக்காட்சிகள், சீனப் பெயர்ப்பலகைகள் எங்கும் பரவும். இலங்கைக்கு வருகின்ற எந்த நாட்டவர்களாகவிருந்தலும் இலங்கையில் இருக்கக்கூடிய தாமரைக்கோபுரத்தை சீனக் கோபுரம் என்கிறார்கள். கொழும்பின் துறைமுக நகரமான போர்ட்சிற்றி தற்போது கட்டப்பட்டு வருகின்றது. இங்கு நாற்பதாயிரம் வீடுகள் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கானோர் இங்கு பணிபுரிவற்கான சகல வேலைத்திட்டங்களும் ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இங்கு என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்துகொள்ள முடியாத அளவிற்கு நிலைமைகள் மோசமாகியுள்ளன. இங்கு கெசினோ உட்பட அனைத்து ஆடவர் அரங்கங்களும், பாலியல் நிலையங்களும் அமைக்கப்பட்டு ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பாரிய வர்த்தகத்தினை சீனா மேற்கொள்ளும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இவ்வாறான நிலைப்பாடுகளைப் போன்றே வடகிழக்கில் நிலங்களை வாங்கி சீனா பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக மன்னார் உட்பட முல்லைத்தீவு என இலங்கையின் தீவுகளை தன்வசப்படுத்துவதற்கு சீனா தற்போதும் முயற்சி செய்து வருகின்றது. அதனையும் சீனா செய்துவிட்டால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

தற்போதைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை சீனாவைத் தவிர வேறு எந்த நாடுகளின் உதவிகளைப் பெற இவர்களுக்கு விருப்பமில்லை. சீனாவுடன் தொடர்புகளை வைத்திருந்தால் எந்த நாடுகளும் ஆதரவினை வழங்குவதாக இல்லை. அது மட்டுமன்றி முஸ்லீம்களுக்கான எதிர்ப்பு அரசியலை கட்டவிழ்த்துவிட்டிருக்கின்ற இந்த அரசாங்கம். அரபு நாடுகளில் இருந்து உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. அது மட்டுமன்றி அரசியல் கைதிகளின் விடுதலை, கடத்தப்பட்டு காணாமல்போனார் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் தமிழினத்தின் மீது இந்த அரசாங்கம் வன்முறைகளைக் கட்டவீழ்த்து வருகிறது.

சீனா அரசாங்கம் தன்னை வலுப்படுத்திக்கொள்வதற்கு இலங்கையில் ஒரு வன்முறைக் கலாச்சாரம் தொடர்வதற்கான நிலைப்பாட்டை ஏற்படுத்தி அதற்கான உதவிகளை இன்னமும் வழங்கி வருகின்றது. இதனால் இலங்கை அரசு கடன் சுமைக்கு மேல் கடனாக இருப்பதனால் அதனை நிவர்த்தி செய்ய முடியாத நிலை தற்போது காணப்படுகிறது. ஆட்சி மாற்றத்தின் ஊடாக கடன் சுமைகளைக் குறைக்க முடியும் என்பது சாத்தியமற்றது.

ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள சீன வர்த்தக கட்டிடங்கள் மற்றும் துறைமுக நகரான போர்ட் சிற்றி போன்றவை இதில் முக்கிய விடயங்களாக உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறாக இருக்கின்ற போது இலங்கை அரசாங்கம் இவற்றிலிருந்து மீள்வதாகவிருந்தால் சீனாவுக்கு பல திரில்லியன் நஸ்ட ஈட்டினை செலுத்தவேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு மீள் செலுத்துவற்கு இலங்கையிடம் பணம் இல்லை. தற்போது மத்திய வங்கியின் அறிக்கையின் படி ஒரு மாதத்திற்கான கையிருப்பு மாத்திரம் இருப்பதாக கூறப்படுகிறது. ஒரு நாட்டின் பண இருப்பு அல்லது உலக வர்த்தக சந்தையில் முன்னேற்றகரமடைந்த நாடு என்று கூறுவதற்கு குறித்த வங்கியில் ஒரு தொகை பணம் காட்டப்படல் வேண்டும். அவ்வாறு தங்கங்களை வைத்தே ஒரு நாட்டில் பணத்தை அச்சடிக்க முடியும். ஆனால் இலங்கை அரசாங்கம் கருப்புப் பணத்தை வைத்திருப்பதாகவும் அதிக பணம் அச்சிடப்பட்டதாகவும் இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியாகவும் பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இன்று இலங்கையின் மக்கள் வங்கியை கருப்புப் பட்டியலில் சேர்க்கும் அளவுக்கு சீனா சென்றுள்ளது.

அது மட்டுமன்றி இலங்கையில் கொவிட் வைரசின் காரணமாக முதலாவது, இரண்டாவது, மூன்றாம் அலைகளில் இறப்பு விகிதம் என்பது நூறு பேர் வரை மாத்திரமே. ஆனால் நான்காம் அலையின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தும் உள்ளனர். பாதிக்கப்பட்டும் உள்ளனர். ஆகவே இந்த நிலையில் சீன அரசாங்கமே கொவிட் வைரசை உலக நாடுகளுக்கு பரப்பியது என்பதை அறிந்தும் அந்த நாட்டை நட்புறவாக வைத்திருப்பதும் ஆபத்தானது. குறித்த நாட்டின் நட்புறவில் இருந்து ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் மீளெழுவது சாத்தியமில்லை. இந்த நாட்டின் ஆட்சி கவிழ்க்கப்பட்டால் சீனாவிடமே மஹிந்த குடும்பம் அரசியல் தஞ்சமடையவேண்டிய நிலையும் வரும்.

விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் அந்நிய நாடுகளின் தலையீடு இந்த நாட்டில் நுழைய முடியாத அளவிற்கு அன்றைய சூழல் இருந்தது. அதனால் சீனாவின் வர்த்தகத்தை இந்த நாட்டில் கொண்டுசெல்ல முடியாத நிலையில் தான் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கவேண்டிய நிலைப்பாட்டுக்கு சீன அரசு வந்தது. இலங்கைக்கு உதவிகள் செய்தது. சர்வதேசமும் அதற்கு ஒத்துழைத்தது. ஆகவே இனிவரும் காலங்களில் இந்த நட்டினுடைய இறைமையை பாதுகாக்கும் வகையிலும் சர்வதேச நாடுகளில் இருந்து பாதுகாக்கும் வகையிலும் இலங்கை அரசின் புலனாய்வு கட்டமைப்புக்களை பலப்படுத்தி, அந்நிய நாடுகளின் ஊடுறுவல்களை தடுத்து மீள் கட்டுமானங்களை உருவாக்கி மூவின மக்களும் இலங்கையில் சமத்துவமான மக்களாக கருதப்பட்டு சர்வதேசத்தில் வாழக்கூடிய தமிழ் சமூகத்தையும் அதன் வர்த்தக முகவர்களையும் உள்வாங்கிக்கொண்டு இலங்கையின் வர்த்தகத்துறையினை மேம்படுத்த முடியும். இலட்சக்கணக்கான தமிழர்கள் வெளிநாடுகளில் தொழிற்சாலைகளை அமைத்துள்ளார்கள். இந்த அரசும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் இந்த இலங்கைத் தீவானது பாரியதொரு அபிவிருத்தியினைக் காணும்.

இன்று பல நாடுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் தூதுவர்களாகவும் அனைத்துத் துறைகளிலும் தமிழ் பேசும் மக்கள் தம்மை அடையாளப்படுத்தி ஆசிய பசுபிக் நாடுகளில் தமக்கான ஓர் அடையாளத்தை பிடித்திருக்கிறார்கள். இவர்களின் முதலீடுகள் பல கோடிகளைக் கடந்துசெயற்படுத்தப்படுகிறது. ஆகவே அரசு இவர்களையும் உள்வாங்கிக்கொண்டு செல்வதன் ஊடாக இந்நாட்டில் கடன் சுமையை இல்லாதொழித்து அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றியமைக்க முடியும்.

தொடர்ந்தும் ஜனாதிபதி கோட்டாபய அவர்களை சீனா கொத்தடிமையாக வைத்துக்கொண்டு செயற்படுகிறது. இந்நிலை மாற்றப்படவேண்டும். இல்லையேல் இந்நாட்டில் இருக்கக்கூடிய சிங்கள பௌத்த துறவிகளும் தமிழ் உணர்வாளர்களும் மாற்றுவழி பற்றி சிந்திக்க நேரிடும். அதற்கான நடவடிக்கைகள் தற்போது இலங்கைத் தீவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. போரைக் காரணங்காட்டி தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்காத இலங்கை, தற்போது போர் முடிந்து பத்து வருடங்களைக் கடந்தும் தீர்வினை வழங்காத இலங்கையரசு, தற்போது இறந்தவர்களுக்கு சுயாதீனமாக அஞ்சலி செலுத்த முடியாத சூழலை இந்நாட்டில் உருவாக்கியுள்ளது.

ஆகவே இன மத பேதங்களைக் கடந்து இந்நாட்டினை அந்நிய சக்திகளிடம் இருந்து காப்பாற்ற இலங்கை வாழ் மக்கள் என்ற ஒருமித்த எண்ணக்கருவில், நாம் அந்நிய நாடுகளின் சக்திகளை எதிர்த்து போரிடவேண்டிய கட்டாயத்திற்கும், இந்த நாட்டின் அரசியல் தலைமைகளை பாதுகாக்கவேண்டிய கட்டாயத்திற்கும் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதே இன்றைய பூகோள அரசியலின் யதார்த்தம்.

**நெற்றிபொறியன்**

# சர்வதேச ரீதியில் இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பொருளாதார ரீதியில் ஆபத்தானவை!



இன்றைய இலங்கையின் அரசியல் பொருளாதார சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே இலங்கை தனது பொருளாதார ரீதியில் வலுவானதொரு நாடாக திகழ முடியும். 30 ஆண்டுகள் யுத்த சூனியமாகக் காட்சியளித்த இலங்கை, ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியதன் விளைவு இன்றைய பூகோள அரசியலில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கையின் கடல், வான், தரை பாதுகாப்பு என்பது உறுதியான நிலைப்பாட்டில் இருக்கவில்லை. இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளின் பிடிக்குள் தற்பொழுது இலங்கை அரசாங்கம் காணப்படுவது என்பதும் பல வல்லரசுகளை இலங்கை அரசாங்கம் எதிர்ப்பதன் ஊடாக தொடர்ந்தும் ஏனைய நாடுகளை எதிர்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய கடன் பெறுவதற்கான ஒரு செயற்றிட்டமாகவே அவரின் வெளிநாட்டு விஜயங்கள் அமைந்திருக்கிறது. ஆனாலும் சர்வதேச நாடுகளின் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் அதற்கான அங்கீகாரங்களை உரிய முறையில் வழங்கினால் மாத்திரமே கடன் உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்கும் என்ற அடிப்படையில் இன்றைய சர்வதேச சூழ்நிலை காணப்படுகிறது.

மக்களுக்குத் தேவையான முக்கிய பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது என்பது ராஜபக்சக்களுக்கு பெரும் சவாலாகவே அமையும். விடுதலைப்புலிகளுடனானப் போரைக் காரணங்காட்டி, அவர்களுக்கானத் தீர்வுத்திட்டத்தை வழங்காத ஒரு சூழ்நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையிடமும் மனித உரிமை ஆணையகத்திடமும் இப்பிரச்சினைகள் தொடர்பாகவும், அரச தரப்பின் போர்க்குற்றம் தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கானதொரு தீர்வுத்திட்டத்தை வழங்கவேண்டும் என சர்வதேச நாடுகளும் கூறிவரும் நிலையில், இலங்கை அரசு சீன அரசின் ஆதரவோடு எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்கின்ற ஒரு நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகின்றமையானது இலங்கை அரசைத் தான் பெரும் ஆபத்திற்குள் தள்ளியுள்ளது.

குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகம், போர்ட் சிற்றி, தாமரைக்கோபுரம் போன்ற சீனாவின் நில ஆக்கிரமிப்புக்கள் இலங்கை அரசிற்கு பெரும் கடன் சுமைகளை ஏற்படுத்தியுள்ளது மட்டுமன்றி பல பொருட்களுக்குத் தடை விதிக்கும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. கொவிட் வைரசினுடைய தாக்கத்தை எதிர்கொண்டுள்ள உலக நாடுகள் தமது பொருளாதாரக் கட்டமைப்புக்களை வலுச்சேர்த்து வரும் சூழ்நிலையில் அல்லது அதற்கான மாற்றுவழியினைக் கையாண்டு வரும் நிலையில் இலங்கை அரசு மட்டும் தொடர்ந்தும் இன மத வாதங்களைத் தூண்டிக்கொண்டிருப்பது என்பது அல்லது தமிழ் மக்களுக்கானத் தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாது என்று கூறுவதும் "யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக்கொண்டதற்குச் சமனானதாகவே இருக்கிறது." காலத்தின் தேவை கருதி அரசாங்கம் செயற்படவேண்டும். சர்வதேச ரீதியில் ஒரு தாக்கம் ஏற்படுகின்றபோது அந்த தாக்கத்தை எதிர்கொள்ள குறித்த நாடுகள், சீனாவிடமும் ஏனைய நாடுகளிடமும் கடன்களைப் பெற்றுள்ள நிலையிலும் அவைகளை மீளச்செலுத்துவதற்கு அந்தந்த அரசாங்கங்கள் நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன. ஆனால் இலங்கைத் தீவில் மட்டும் கடந்த கால அரசுகள் விட்டுச்சென்ற கடன் சுமைகளில் ஒரு பகுதியை இந்த அரசாங்கம் கொண்டுசெல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சூழலில் 13வது திருத்தச்சட்டத்தை வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ் சார்ந்த கட்சிகள் தமது சுயலாப அரசியலையே இந்நாட்டில் தொடர்ந்து வருகின்றனர். மாகாண சபையின் ஊடாக மக்களுக்கானத் தீர்வு என்பது எந்தளவிற்கு சாத்தியம் என்பதும், இந்தியாவினது நலன் கருதியே அமையப்பெற்றுள்ளது. ஆகவே இலங்கையைத் திருப்திப்படுத்தும் வகையில் இந்தியா தொடர்ந்தும் தனது நட்பு ரீதியான பயணங்களைத் தொடர்வதற்கு ஏதுவாகவே பல வியூகங்களை அமைத்துள்ளது. மாகாண சபையினை இலங்கையில் அமுல்படுத்துவதுடன் தமது அரசியல் விருப்பு வெறுப்புக்களை தொடர்ந்தும் இலங்கை மீது மேற்கொள்ள முடியும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. ஒவ்வொரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ளும் இலங்கையரசின் தலைவர்கள், குறித்த நாடுகளுடன் கடன் அடிப்படையிலான ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இறுதியாக பங்களாதேசிடம் கூட கடன் பெறப்பட்டுள்ளது.

வடகிழக்கில் வாழக்கூடிய தமிழ் மக்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதை விட்டுவிட்டு அரசாங்கம் எதையெதையோ தேடிக்கொண்டிருக்கிறது. மீண்டும் எவ்வாறு இனவாதத்தைத்தூண்டி மதக்கலவரத்தை உருவாக்கி நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் இந்த நாட்டில் தற்போது "ஒரே நாடு ஒரே சட்டம்" என்கின்ற ஜனாதிபதி செயலணியின் ஊடாக அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற விடயங்கள் மிகக் கவலைக்கு ஏதுவாகவே அமைந்துள்ளது. "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற போர்வையில் தமிழ் மக்களை அடக்கியொடுக்கின்ற செயற்பாடுகளுக்கே வழிவகுத்துள்ளது. குறித்த செயலணிக்கு கலகொட அத்தே ஞானசார தேரரை நியமித்திருப்பது வேடிக்கையானது. கடந்த காலங்களில் அவர் முஸ்லீம்-தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட விதம், அது மட்டுமன்றி தொலைபேசியில் தகாத வார்த்தைகளால் ஒருவரை மிரட்டியதையும் குழுக்களை வைத்து தாக்குதல்களை நடத்துவது போன்ற விடயங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகிய போதிலும் அதனைக் கவனத்திற்கொள்ளாது ஒரே நாடு ஒரே சட்டம் செயலணிக்கு ஜனாதிபதி அவர்கள் இவரைத் தலைவராக நியமித்திருப்பது என்பதும் அது மட்டுமன்றி ஓய்வுபெற்ற கரன்னாகொடவுக்கு வடமேல் மாகாண ஆளுநர் பதவி வழங்கியிருப்பது என்பதும் பெரும் சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது. வன்முறையாளர்களுக்கு பதவிகளை வழங்குவதன் ஊடாக அவர்களுக்கு மேலும் புத்துணர்ச்சியூட்டும் வகையிலேயே ஜனாதிபதியின் செயற்பாடு அமைந்துள்ளதுடன், இனங்களுக்கிடையில் முறுகல் நிலைமைகளையே உருவாக்கும் வாய்ப்பின் கதவினைத் திறந்துவிட்டிருக்கிறது.

இந்த சூழலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் மிகவும் மோசமான கட்டத்தை நோக்கிச் செல்கிறது. என்றுமில்லாதவாறு நாட்டில் வறுமை தலைவிரித்தாடுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கு விலையேற்றுவதன் ஊடாக மக்கள் அரசின் மீது வெறுப்பைத்தான் வெளிப்படுத்துவார்கள். இதனால் இந்நாட்டு மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். ஒரு மாதத்திற்குப் போதுமான அளவே மத்திய வங்கியில் பணம் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் நாணயத்தாள்கள் பில்லியன் கணக்கில் அச்சிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி உலக வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் அதனுடன் இணைந்து செயற்படுவதற்கு இலங்கையரசு தகுதியற்றது என்கின்ற ஒரு கண்ணோட்டமும் தற்போது விதைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகளுக்கு விஜயம் செய்கின்ற இலங்கையரசின் பிரதிநிதிகள் குறித்த நாடுகளுக்கு சிறுபான்மை இனத்திற்கான ஒரு தீர்வை பெற்றுக்கொடுத்து, நாட்டின் உல்லாசத்துறையினை வளர்த்தெடுக்கின்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றோம் என்கின்ற வாக்குறுதியை வழங்கினால் மட்டுமே இலங்கையின் பொருளாதாரம் உச்சக்கட்ட இலாபத்தினைப் பெற முடியும். தமிழ்த் தரப்பினை பொறுத்தவரையில் அரசாங்கத்துடன் பேசி ஒரு தீர்வை பெற்றுக்கொள்வார்கள் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் அரசாங்கத்தின் அடிவருடிகளாகவே செயற்பட்டு வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அக்கட்சிக்குள்ளேயே குழப்பங்கள் ஏற்பட்டு இதுவரையில் அரசுடன் எந்தவொரு பேச்சுக்களும் உத்தியோகபூர்வமாக நடைபெறவில்லை. இவ்வாறே அரசாங்கம் காலத்தை இழுத்தடித்துக்கொண்டிருக்கிறது.

நேரடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்திடம் இருந்து நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மாகாண சபைகள் உருவாக்கப்படுகின்ற சூழ்நிலையில் அதன் ஊடாக எமது குறைகளை நிவர்த்தி செய்வதோடு அபிவிருத்திகளையும் செய்ய முடியும். எம் உரிமைக்காக தொடர்ந்தும் தமிழினம் குரல் கொடுக்கவும் முடியும்.

நிலையான ஒரு அரசியலை தமிழ்த்தரப்பு அடையும் வரை தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது சாத்தியமற்றதொன்றாகவே அமைந்துள்ளது. தற்போது இருக்கின்ற சூழ்நிலையினை எடுத்துக்கொண்டால் சர்வதேச நாடுகள் தொழல்நுட்ப ரீதியில் பாரிய வளர்ச்சினை கண்டுள்ளது. ஆகவே வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்பட நாட்டு மக்கள் செயற்படவேண்டும். கல்வியில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும். பாடசாலை மாணவர்களில் மத்தியில் தொழில்நுட்ப மற்றும் செய்முறை விடயங்கள் உள்வாங்கப்பட வேண்டும். சர்வதேச நாடுகளைப் போல பொறியியல் துறை நமது நாட்டில் இன்னமும் விரிவாக்கப்பட வேண்டும். இல்லையேல் மாறுபட்ட ஒரு சமுதாயமாக இலங்கைத்தீவு உருவாகும் ஒரு நிலை ஏற்படும். எங்கு பார்த்தாலும் இராணுவ மயமாக்கல். இவ்வாறு இந்த நாடு சென்று கொண்டிருக்குமாகவிருந்தால் இந்நாட்டில் ஒரு இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்தியா மற்றும் நோர்வே அரசாங்கங்களை நம்பி தமிழர்களுடைய பிரச்சினை தீர்வின்றி ஏமாற்றத்தை அடைந்தது தான் வரலாறு. தொடர்ந்தும் தமிழினம் ஏமாற்றமடையாத வகையில் அரசாங்கத்திற்கு அஹிம்சை ரீதியிலான அழுத்தங்களைக் கொடுப்பதன் ஊடாக ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதே தமிழினத்தின் நிலைப்பாடாக இருந்தாலும் உள்நாட்டுப் பொறிமுறையை அரசு வலியுறுத்தி வருகிறது. ஆனால் சர்வதேச விசாரணையின் மூலமே தமிழினத்திற்கானத் தீர்வினைப் பெற முடியும் என்கிறது தமிழினம். இங்கு முரண்பட்ட கருத்துக்கள் தோன்றுகின்றன.

யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு தீர்வினை வழங்காத அரசு, யுத்தத்திற்குப் பின்னரான சர்வதேச நாடுகளின் தலையீட்டிற்கும் அடிபணியாத அரசு, இன்று தமிழனத்திற்கானத் தீர்வை தட்டில் வைத்து அரசு வழங்கும் என நம்புவது முட்டாள்த்தனம். ஆகவே தமிழ் தரப்பு போராடுவதன் ஊடாகவும், தொடர்ச்சியான அழுத்தங்களின் காரணமாகவுமே இலங்கை அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டிற்கு வருமே தவிர, சர்வதேச நாடுகள் தமிழினத்திற்கு உதவி செய்யும் என்கிற நிலைப்பாட்டில் இருந்து தமிழ்த்தரப்பு விலகிக்கொள்ள வேண்டும்.

இன்றும் தமிழினம் சுயலாபத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. அவரவர்களின் தேவைக்காகதமிழ்மக்களின்பிரச்சினைகள் பேசப்படுகின்றன. எனவே தொடர்ச்சியான இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாகவிருந்தால் சர்வதேச சட்டங்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாகவிருந்தால் தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டங்களை விரைவில் முன்வைப்பதே அரசின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்பதே இன்றைய அரசியலின் நிலைப்பாடு.

நெற்றிபொறியன்

# முஸ்லீம் அரசியல் கட்சிகளின் தலைமைகளை நம்பி தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவு என்பது ஆபத்தானது!

தமிழ் கட்சிகளினுடைய ஒன்றிணைவு என்பதும் இன்று கொழும்பில் இடம்பெற்ற தமிழ் பேசும் மக்களினுடைய கட்சிகளின் பிரதிநிதித்துவத்தினை கொண்டிருக்கின்றவர்களுடைய ஒன்றுகூடல் பற்றி தான் நாங்கள் பார்க்க இருக்கின்றோம். இந்த அடிப்படையிலே பார்க்கும் பொழுது ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளின் பொழுது முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த ரவூப் ஹக்கீம் அவர்கள் அங்கு குழப்பியடித்துவிட்டு வந்த துல்லியமான நிகழ்வு இருக்கின்றது. அந்த கட்டத்திலே ஒரு தீர்வை காண்பதற்காக அதாவது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் தீர்வு திட்டம் தொடர்பில் அவர்கள் அவர்களினுடைய இடத்திற்கு திரும்பலாம் என்ற தற்காலிகமாக செய்யப்பட்ட விடயம் என்ற நிலைப்பாட்டை தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஹக்கீம் அவர்களிடம் தெளிவாக டான் ஹோட்டலில் எடுத்துக்கூறியும் அவர் ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டு வந்துவிட்டார். எனவே இந்த சூழ்நிலையிலே முஸ்லிம்களை இணைத்து செயற்படவேண்டும் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் அதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இப்பேர்ப்பட்ட குழப்பங்களை கட்சி தலைமையிலுள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். என்னவென்றால் முஸ்லிம் காங்கிரஸில் இருக்கக்கூடியவர்கள் அரசாங்கத்திற்கு ஒரு சாரார் சென்று கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கத்திற்கு ஒருசாரார் வக்காளத்து வாங்கிக்கொண்டு பேசிக்கொண்டிருக்கின்றார்கள் இந்த நிலையிலே அது போன்று ரிஷாட் பதியூதினின் கட்சியை சார்ந்தவர்களும் அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்குகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

ஆகவே முஸ்லிம் தரப்பை நாம் இணைத்து செயற்படுவது எந்தளவு சாத்தியம் என்பது பற்றி நாம் ஆராய்ந்து அவர்களுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திய பின்னர் தான் தமிழ் தலைமைகள் இன்று ஒன்று சேர்வது என்பது சாலச்சிறந்தது ஒன்று. மற்றும்படி ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் ஈ.பி.டி.பி அவற்றை சேர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. பிள்ளையான் அணி, கருணா அணி இருக்கின்றது இதுபோன்று பல அணிகள் இருக்கின்றது ஆனால் இவற்றை சேர்ப்பதற்கு அரசியல் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இருக்கக்கூடிய அதுவும் அரசாங்கத்துடன் அதிகளவு கொலை கொள்ளை கற்பழிப்பு செய்யாதவர்களை இணைத்துக்கொண்டு தற்பொழுது கூட்டமைப்பு செல்கின்றது. அந்தடிப்படையில் பார்க்கின்ற பொழுது மனோகணேசனின் நகர்வு என்பது கடந்த காலத்திலே பிரபாகணேசன் அவர்களினுடைய நகர்வு என்பது என்னவென்று தெரியும். ஆகவே இவர்கள் கூட அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற ஒரு வலுவான கட்சியாகத் தான் அந்த காலத்தில் யுத்தத்திற்கு முன்னர் செயற்பட்டார்கள்.

ஆகவே ஏதோவொரு காலகட்டத்திலே இவர்களையும் இணைத்து செயற்பட வேண்டும் என்று தேசிய தலைவர் அவர்கள் அவர்களை வன்னிக்கு அழைத்திருந்தார். இந்த பேச்சுவார்த்தை ஹோட்டலிலே இடம்பெற்றது. அண்ணன் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களுடைய இறப்பிற்கு பின்னர் பலமான கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் நேரடியாக களமிறங்கினார்கள். தமிழ் மக்களின் ஒன்றிணைவு என்பது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் பலமான இருந்தபொழுது 22 ஆசனங்களை கைப்பற்றியது போன்று இந்த ஆசனங்களை கைப்பற்றக்கூடியதாக அமைய வேண்டும். தமிழரசுக் கட்சி வீழ்ச்சியடைந்துவருகின்றது அல்லது தமிழரசுக் கட்சி ஒரு வங்குரோத்து நிலை அடைகின்றது என்பதற்காக உண்மையிலே தமிழ் கட்சிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று பதிவு செய்வதனூடாக தமிழரசுக் கட்சி எங்களுடைய கட்சி இல்லாமல் போவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது என்று நினைக்கின்றது அப்படியிருந்தாலும் கூட அவர்கள் 6 ஆசனங்களை மட்டும் தான் தமிழரசுக்கட்சி வடக்கு கிழக்கிலே பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது ஏனைய ஆசனங்களை புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களினுடைய கட்சிகள் பெறுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது.

ஆகவே இந்த ஒன்றிணைவிலே அனைத்து தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியிலே ஒன்றிணைய வேண்டும் அதிலே மாற்றுக்கருத்தில்லை. எமது ஊடகமும் அதற்கான முயற்சிகளை தான் செய்துகொண்டு இருக்கின்றது. அந்த அடிப்படையில் இந்த பிரச்சனைகளை குழப்புகின்றவர்களை இனங்கண்டு அவர்களுக்கேற்ற தண்டனைகளை வழங்கக்கூடியவர்களாக தற்பொழுது இணைந்துகொள்கின்ற கட்சிகள் செயற்பட வேண்டும். ரெலோ புளொட் ஈபிஆர்எல்எப் போன்ற கட்சிகள் இருக்கின்றன. பாரிய ஆயுதம் தாங்கிய கட்சிகள் இவைகள் எனவே இவர்களுக்கு எவ்வாறான நடவடிக்கைகளை எந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்று சொல்லத்தேவையில்லை. அதற்கு முரணாக செயற்படுகின்றவர்களை அடுத்தகட்ட நகர்வு என்ன என்பதை வெளிப்படையாக கூறாவிட்டாலும் கூட மறைமுகமாக என்ன தீர்மானங்களை செய்ய வேண்டும் என்று முன்னெடுத்து செல்வதனூடாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அதனை கட்டியெழுப்பி செல்லமுடியும்.

இன்று த.தே.கூட்டமைப்பினுடைய தலைவராக இருக்கின்ற இரா. சம்பந்தன் அவர்கள் 85 வயதை தாண்டியுள்ள நிலையிலும் உண்மையில் ஒவ்வொரு தீபாவளிக்கும் தீர்வு தீர்வு என்று அரசியல் கட்சி அல்லது மக்களுக்கு ஒரு நம்பிக்கையை கொடுக்க வேண்டும் காலா காலமாக இந்த அரசு தொடர்ந்தும் பிரச்சனைகளை நீடித்துக்கொண்டு செல்கின்ற வகையிலே ஒவ்வொரு அரசியல் கட்சி தலைவர்களும் வழமையாக கூறுவதே. இதனை இந்த தமிழ் ஊடகங்கள் ஒரு சில எடுத்துரைப்பதனூடாகவும் டான் டீவி, கெபிடல் டீவி இவைகள் எல்லாம் தமிழர்களுக்கு எதிராகவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றது. ஆனால் இலங்கையிலே தனியாக வடகிழக்கிலே வானொலி ஒன்றையோ அதற்கான அலை வரிசை ஒன்றையோ செய்யக்கூடாது என்பதில் அவர்கள் திடமாக இருக்கின்றார்கள்.

ஆகவே தொழில் அதிபர்கள் அங்கு இருக்கின்றவர்கள் நேரடியாக வந்து இங்கு ஒரு வானொலியை ஆரம்பித்து தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலே செயற்பட வேண்டும். ஏனென்றால் ஊடகங்கள் என்பது இந்த நாட்டிலே ஒரு முதுகெலும்பாக இருக்கின்றது. ஊடகங்கள் ஒரு முதுகெலும்பாக செயற்படும் பொழுது தான் இவர்களால் எதையுமே செய்யமுடியாத சூழல் உருவாகும். ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்திலே 35 ஊடகவியலாளர்கள் தங்களின் பேனாக்களின் எழுத்துக்களினால் இந்த நாட்டிற்கு ஒரு விடுதலையை கொடுக்க வேண்டும் என்ற ரீதியிலே செயற்பட்ட பொழுது அவர்கள் அரசாங்கத்தினால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டு சுட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

1 இலட்சத்து 40 ஆயிரம் பேர் ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அது போன்று மொத்தமாக 2 அரை இலட்சம் மக்கள் இந்த போராட்டத்தினால் பாதிக்கப்பட்டு இறந்திருக்கின்றார்கள். ஆகவே நாங்கள் முக்கியமாக சிந்திக்க வேண்டிய விடயம் அரசியல் கைதிகளின் விடுதலை. பயங்கரவாத




தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் அதுபோன்று காணி பொலிஸ் அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் இவற்றையெல்லாம் தற்பொழுது அரச ரீதியில் அணுகி அணுகுமுறைகளுக்கான தீர்வை நாங்கள் பெற்றுக்கொள்ள தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். வெறுமனே இந்தியாவுக்கு ஒத்து ஊதுகின்ற அல்லது அமெரிக்காவிற்கு ஒத்து ஊதுகின்ற அல்லது சீனாவிற்று ஒத்து ஊதுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடாது ஐரோப்பிய நாடுகளுக்கு ஒத்து ஊதுகின்ற நடவடிக்கைகளையும் இந்த பூகோள அரசியலிலே ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கங்கள் அனைத்தும் தமிழ் தரப்பை பாவிக்கின்ற ஒரு சூழல் தற்பொழுது உருவாகியிருக்கின்றது.

ஆகவே இதிலிருந்து இவர்கள் வெளியிலே வரவேண்டும். அன்று தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பல ஆயுத கட்சிகள் எதிர்த்தார்கள் காரணம் அதற்கு இலங்கை அரசு தான் முக்கிய பொறுப்பு அதுபோன்று ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே கருணா பிள்ளையான் பிரிவிற்கும் இந்த அரசாங்கமே பொறுப்பு. தந்திரமாக பிரித்தார்கள் ஆகவே நாம் ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் அரசியல் ரீதியாக இந்த அரசாங்கம் நிச்சயமாக தரவேண்டும். தராவிட்டால் போராட்டமானது மாற்றுவழியிலே செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்பது தினம் தினம் தர்காரில் இருந்து தம்புள்ள போன்ற 40 பள்ளிவாசல்களிலே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. குர்ஆன் ஓதக்கூடாது ஒளிபெருக்கிகள் எழுப்பக்கூடாது என்றும் கூட இருந்தார்கள். இப்படி இவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக சட்டங்களை எல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள் திருமண தடைச்சட்டம் எல்லாம் வந்திருக்கின்றது.

ஆகவே இந்த முஸ்லிம் சிறுபான்மை இனத்தையும் ஒதுக்கிவிட்டால் அடுத்து தமிழர்கள் மீது இலகுவாக சட்டங்களை கொண்டுவந்துவிடுவார்கள். இன்று ஒரு நாடு ஒரே சட்டம் என்ற ரீதியினூடாக இனவாதி கலகொட ஞானசார தேரர் ஊடாக தற்பொழுது காய் நகர்வுகள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எனவே கலகொட ஞானசார தேரரின் கருத்துக்களை நாம் செவிமெடுத்து செயற்பட வேண்டிய தேவை எமக்கு கிடையாது. காரணம் என்னவென்றால் அவர் ஒரு வன்முறையாளர் வன்முறையாளரின் கருத்துக்கள் தொடர்ந்தும் இந்த நாட்டிற்கு வன்முறைகளைத் தான் தோற்றுவித்துக்கொண்டிருக்கும். இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்களும் இந்த நாட்டின் பிரதமர் அவர்களும் ஏனைய அமைச்சர்களும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை பெற்றுத்தராது விட்டால் இந்த நாட்டில் நிம்மதியாக அவர்களும் வாழமுடியாத சூழ்நிலை நிச்சயமாக உருவாக்கப்படும் அதைத்தான் இன்று சர்வதேசங்கள் தமிழினத்தின் ஊடாக டயஸ்போராவினூடாக அல்லது உலகெங்கும் பரந்துவாழும் மக்களின் ஊடாக தமிழ் பேசும் மக்களின் ஊடாக காய்கள் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தம் இனி நவீன மயமாக்கப்பட்டு அந்த தாக்குதல்கள் முன்னெடுக்கப்படும் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை.

ஏனென்றால் தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது அரசாங்கம் தரவேண்டிய இக்கட்டான சூழ்நிலையிலே இருக்கின்றது. எனவே அனைவரும் கூறியது போன்று இந்த நாட்டிலே இனப்படுகொலை இடம்பெற்றது கடத்தல் காணாமலாக்கப்படல் இவ்வாறெல்லாம் இடம்பெற்றது. ஈபிடீபியை பொறுத்தவரையிலே யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்துடன் ஒட்டுக்குழுக்களாக இருந்து செயற்பட்டு எத்தனையோ அட்டூழியங்களை செய்துகொண்டிருந்த அந்த காலகட்டத்திலே சந்திரிக்கா.மகிந்த கோட்டபாய ராஜபக்சவினுடைய காலங்களிலே இடம்பெற்ற சம்பங்கள் அனைத்தும் நீங்கள் அறிவீர்கள். எனவே இந்த தமிழ் கட்சிகள் அனைவரும் தமிழ் மக்களுக்கான தீர்வை பெறவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை கொண்டு சுயலாப அரசியலுக்காக உங்களுக்கான சொத்துக்களை சேகரிப்பதோ அல்லது உங்களுக்கான இலகுவான நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதோ அல்ல. இனப்படுகொலைக்கான தீர்வு எமக்கு வேண்டும் ஐக்கிய நாடுகள் சபையிலே எவ்வாறு வலுவான ஆவணங்களை தயாரித்து எண் சனல் 4 என்ற ஒரு ஊடகத்திற்கும் அவ்வாறே இயலுமாக இருந்தால் இங்கு இருக்கக்கூடிய ஊடகத்தினூடாக கொண்டு செல்வதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் முயற்சி செய்ய வேண்டும்.

இவ்வாறான ஒரு சூழல் உருவாக்கப்படுமாக இருந்தால் நிச்சயமாக தமிழ் பேசும் மக்கள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தி சிறுபான்மையினத்திற்கு இந்த நாட்டில் ஒரு மிக முக்கியமான தீர்வு எட்டப்படும் இன்று இதுபோன்று கிழமைக்கு கிழமை அரசியல் கட்சிகள் கூடி பேசுகின்ற பொழுது இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்ந்தும் அழுத்தம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். அதுபோன்று ஏனைய நாடுகளுக்கும் சென்று அந்த நாடுகளுடாக அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் ஏற்படுத்த இலகுவாக இருக்கும். இன்று சர்வதேசத்தின் ஊடாக உதவிகளை பெற்றும் கூட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள் அந்த அடிப்படையிலே த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் இந்த ஒற்றுமையை பேணி தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆனந்த சங்கரி அவர்கள் இருக்கின்றார்கள் தமிழர் விடுதலை கூட்டணி பலம்பெரும் கட்சியாக இருந்தது அவரையும் இணைத்துக்கொண்டு செயற்படுவதன் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வு கிடைக்கும்.

**இரணியன்**



# பிராந்திய செய்திகள்



## இலங்கையில் புதிய வகை உரங்களை அறிமுகப்படுத்த தயார்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உரங்களின் பெறுமதியை அதிகரிக்கும் வகையில் பொஸ்பேட், பொட்டாசியம் மற்றும் நைட்ரஜன் அடங்கிய புதிய வகை உரங்களை அறிமுகப்படுத்த இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது. பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதற்கட்ட நடைமுறை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக விவசாய அமைச்சில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொஸ்பேட் உரங்களின் மதிப்பை கூட்டி தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய உரக் கலவையைப் பயன்படுத்தியதனூடாக சோளப்பயிர்ச் செய்கை வெற்றியடைந்துள்ளதாக பேராசிரியை நிர்மலா கோட்டேகொட இந்த கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார். இந்த புதிய வகை உரத்தைப் பயன்படுத்தி மரக்கறிகள் மற்றும் பிற பயிர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது வெற்றி அடைந்தால், இயற்கை விவசாயத்திற்குத் தேவையான அனைத்து கூறுகளையும் கொண்ட உயர்தர உரங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## சமையல் எரிவாயு வெடிப்பு - 8 பேர் கொண்ட குழு நியமனம்

சமீப காலமாக நாட்டில் ஏற்படும் சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 8 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் தலைவராக பேராசிரியர் சாந்த வல்பொலகே நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து அதற்கான தீர்வுகளுடன் கூடிய அறிக்கையை விரைவில் கையளிக்குமாறு ஜனாதிபதி குறித்த குழுவிற்கு அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## மானிப்பாயிலுள்ள வீட்டிற்குள் நுழைந்து சிலர் தாக்குதல்

யாழ்ப்பாணம் - நவாலி பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் அன்று (15) நுழைந்த சிலர் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், அங்கிருந்த மோட்டார் சைக்கிளொன்றையும் தீயிட்டுள்ளனர். நவாலி வடக்கு மானிப்பாயிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த குழுவினர் வீட்டின் ஜன்னலை சேதப்படுத்தியதுடன், அங்கிருந்த மோட்டார் சைக்கிளொன்றையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

பின்னர் குறித்த குழுவினர் தப்பிச்சென்றுள்ளதுடன், இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலை அருகில் வாள் வெட்டு சம்பவம் – இருவர் கைது!

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் வாள் வெட்டில் ஈடுபட்டவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் கடந்த புதன்கிழமை பட்டப்பகலில் சன நடமாட்டம் நிறைந்த நேரத்தில், மோட்டார் சைக்கிளில் வீதியால் வந்த இளைஞனை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் வழிமறித்து வாள் வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டது.

தாக்குதலில் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் , யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் , சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து இருந்தனர்.




அந்நிலையில் , வண்ணார்பண்ணை பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை அன்றைய தினம் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் அவர்களது வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

அதன் போது , வாள் வெட்டு சம்பவத்திற்கு செல்ல பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றினையும் , வாள் ஒன்றினையும் அவர்களிடமிருந்து மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன் பகை காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளனர். அதேவேளை , குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை கைது செய்யவும் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இறக்காமம் பிரதேச "கலைஞர்கள் சேமநலன் விசாரிப்பு – 2021" நிகழ்வு !

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசணையில் தேசத்தின் கலை மற்றும் கலாசாரத்தினை மிளிரச் செய்யும் பொருட்டு காலந்தொட்டு கலைஞர்களால் ஆற்றும் அரும் பெரும் சேவையை கௌரவித்து தற்போது வயோதிபம் மூலமாக சுகவீனமுற்றுள்ள மூத்த கலைஞர்களை சேமநலன் விசாரிக்கும் நிகழ்வு ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வருகின்றது. அந்த அடிப்படையில் இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் 2021 ஆம் ஆண்டிற்கான கலைஞர்கள் சேமநலன் விசாரிப்பு, சுகயீனம் காரணமாக வரமுடியால் இருந்த கலைஞர்களை வீடு தேடிச் சென்று நலம் விசாரித்து உலர் உணவு பொதி வழங்கிவைக்கும் நிகழ்வு கலாச்சார அதிகார சபையின் ஏற்பாட்டில் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் வியாழக் கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலக கலாச்சார பிரிவின் அனுசரைணையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு கலாச்சார உத்தியோகத்தர் ஏ.எல். பரீனா, கலாச்சார உத்தியோகத்தர் டப்யூ.டி. வசந்தா, கலாச்சார அதிகார சபை சார்பாக உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





## பெண் தோழியை மிரட்ட கழுத்தில் சுருக்கிட்ட நபருக்கு நேர்ந்த சோகம்!

தனது பெண் தோழியை மிரட்டுவதற்காக தவறான முடிவை எடுத்து கழுத்தில் கயிறு போட்டு நேரலை காணொளியில் காண்பித்த இளைஞன் கயிறு இறுகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அன்று (16) மாலை யாழ்ப்பாணம் நாச்சிமார் வீதியில் இடம்பெற்றது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வீரசிங்கம் ஸ்ரான்லின் ஜெயசிங்கம் (வயது -31) என்ற இளைஞன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அச்சகம் ஒன்றில் பணியாற்றி வருகிறார். அவர் தான் தங்கியிருக்கும் அறையில் கதிரையில் ஏறி கூரை மரத்தில் கயிற்றைப் போட்டு கழுத்தில் சுருக்கிட்டு தனது பெண் தோழிக்கு நேரலை காணொளி அழைப்பை எடுத்து மிரட்டியுள்ளார்.

எனினும் கதிரை சரிந்ததால் நிலை தடுமாறிய இளைஞனின் கழுத்தில் கயிறு இறுகியதால் அவரது உயிர் பிரிந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மகாவலி ஆற்றில் குதித்த இளம் ஜோடி!

மஹியங்கனை பாலத்தின் மேல் இருந்து இளைஞன் ஒருவனும் யுவதி ஒருவரும் மகாவலி ஆற்றில் குதித்துள்ளனர். எனினும் ஆற்றில் குதித்த இளைஞன் நீந்தி கரைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மஹியங்கனை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து காணாமல் போன யுவதியை தேடும் பணியில் ஈடுபட்டனர். காணாமல் போனவர் ரிதீமாலியத்த பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய யுவதி என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் மேலதிக வகுப்பில் கலந்து கொள்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தை நேரில் பார்த்த நபர் ஒருவர் கூறும் போது, முதலில் யுவதி ஆற்றில் குதித்ததாகவும் பின்னர் இளைஞன் ஆற்றில் குதித்ததாகவும் தெரிவித்தார். குறித்த சம்பவம் அங்கிருந்த நபர் ஒருவரின் கைப்பேசியில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தது.

## துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய பொருட்களை விடுவிக்க நடவடிக்கை

துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய பொருட்களை விடுவிப்பதற்கு தேவையான நிதியை வழங்க வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன இணங்கியுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



அரிசி, பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதி செய்யப்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும், விரைவில் டொலர் வழங்கப்பட்டால் பொருட்களை விடுவிக்க முடியும் எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, தேவையான நிதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன மத்திய வங்கி ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் 25 மில்லியன் டொலர்களை விடுவிக்க இணங்கியுள்ளதாக அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கான பணம் வழங்கும் பணி இன்று முதல் நடைபெற உள்ளது. இதேவேளை, நாணய மாற்று விகிதக் கொள்கையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.



# சினிமா துளிகள்



## பிக் பாஸ் பிரியங்காவை கலாய்த்து தள்ளும் நெட்டிசன்கள்!

பிக் பாஸ் வீட்டில் பேருந்து டாஸ்க் வழங்கப்பட்டது. பல மணி நேரம் நீடித்த அந்த டாஸ்கில் கடைசிவரை கீழே இறங்காமல் யார் அமர்ந்து இருக்கிறாரோ அவர் தான் வெற்றியாளர். அந்த டாஸ்கில் ராஜீ முதல் ஆளாக கீழே இறங்கிவிட்டார்.



போட்டியாளர்கள் ஒருகட்டத்தில் யார் கீழே இறங்குவது என சண்டை போட தொடங்கிவிட்டனர். மேலும் பேருந்துக்குள் இருக்கும் நபர்களுக்கு பிக் பாஸ் பல்வேறு தடங்கல்களை பிக் பாஸ் கொண்டு வந்தார். தண்ணீர் தெளிப்பது, இடத்தை குறைப்பது, இருக்கைகளை வெளியில் போட சொல்வது என பல விஷயங்களை செய்தார்கள்.

ஆனால் அதற்கெல்லாம் அசராமல் பிரியங்கா இருந்தார். அவர் இறுதியில் ஒரு பீசாவுக்காக கீழே இறங்கிவிட்டார். வெளியேறிய போட்டியாளர்களுக்கு மட்டும் பிக் பாஸ் பீசா அனுப்பி வைத்திருந்தார். அதை ராஜீ, சிபி உள்ளிட்டவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் அனைவருக்கும் காட்டி காட்டி சாப்பிட தொடங்கினார்கள்.

அப்போது பீசா சாப்பிட்டே ஆக வேண்டும் என பிரியங்கா கீழே இறங்கிவிட்டார். "நமக்கு சோறு தான் முக்கியம்" என நெட்டிசன்கள் தற்போது பிரியங்காவை கிண்டல் செய்து வருகின்றனர்.

## திரைப்பயணத்தை கொண்டாடிய திரிஷா

முன்னணி நடிகர்களுடன் ஜோடி சேர்ந்து பல படங்களில் நடித்து இன்னும் கதாநாயகியாக நடித்து வரும் திரிஷா தனது திரைப் பயணத்தை கொண்டாடியிருக்கிறார்.

தமிழ் சினிமாவில் தொடர்ந்து பதினைந்து வருடங்களுக்கும் மேலாகப் பேசப்படும் நடிகையாக இருந்தது சில்க் ஸ்மிதா மட்டும்தான். அதன் பிறகு கடந்த 20 ஆண்டுகளாக திரிஷா தனது திரைப்பயணத்தைத் தொடர்ந்து வருகிறார். மிஸ் சென்னையாகத் தேர்வு செய்யப்பட்ட திரிஷா, அதனைத் தொடர்ந்து சிம்ரன், பிரசாந்த் நடிப்பில் வெளியான ஜோடி படத்தில் சிம்ரனின் தோழியாக திரையுலக பயணத்தைத் தொடங்கினார்.

தற்போது வரை பொன்னியின் செல்வன் படத்தில் நடித்து வருகிறார். மேலும் கர்ஜனை, ராங்கி, சதுரங்க வேட்டை 2 உள்ளிட்ட படங்கள் ரிலீஸ் ஆக தயாராக இருக்கின்றன. இந்த மகிழ்ச்சியைத் தனது நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடியிருக்கிறார் திரிஷா.

தனது டிவிட்டர் பக்கத்தில் விடுமுறை தேவையில்லாத வேலையைப் பெறுங்கள்" அதனால் நான் இந்த வேலையைச் செய்தேன். நான் இன்னும் விடுமுறையில் இருக்கிறேன். உங்கள் அனைவராலும் நான் இந்த இடத்தில் இன்று இருக்கிறேன். என் வாழ்வின் சிறந்த 19 வருடங்களுக்கு நன்றி என்று கூறியிருக்கிறார்.



## நடிகர் விக்ரமுக்கு கொரோனா!

நடிகர் விக்ரமுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து அவர் தனிமைப்படுத்திக்கொண்டார்.

நடிகர் விக்ரமுக்கு கடந்த சில தினங்களாக லேசான காய்ச்சல் மற்றும் உடல் சோர்வு இருந்ததால் அவர் கொரோனா பரிசோதனை செய்துகொண்டார்.

இதில் அவருக்கு தொற்று உறுதியானதை அடுத்து வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டார்.



## வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிக்கும் ஆரி

பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமான நடிகர் ஆரி. அடுத்ததாக வித்தியாசமான கதாபாத்திரம் ஏற்று புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகி இருக்கிறார்.

S.A.S.புரொடக்ஷன் **S.A.S.**யோகராஜ் வழங்க "கண்மணி பாப்பா" திரைப்படத்தை இயக்கிய ஸ்ரீமணி என்கிற பி.அஸ்வின் இயக்கத்தில் புதிய படம் உருவாக இருக்கிறது. இப்படத்தில் பல கோடி மக்களை கவர்ந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் பிக்பாஸ் புகழ் ஆரி வித்தியாசமான கதாபாத்திரம் ஏற்று கதாநாயகனாக நடிக்க இருக்கிறார்.

இப்படத்திற்கான பூஜை நடைபெற்றது. விரைவில் படப்பிடிப்பு தொடங்க இருக்கும் இப்படத்தில் ஆரியுடன் பிரபலமான நடிகர்கள், நடிகைகள் நடிக்க இருக்கிறார்கள். இவர்களை பற்றிய விவரம் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களின் பட்டியலை விரைவில் படக்குழுவினர் வெளியிட இருக்கிறார்கள்.



## சூர்யாவின் வாடா தம்பி... எதற்கும் துணிந்தவன் படத்தின் பர்ஸ்ட் சிங்கிள்



சூர்யா நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் எதற்கும் துணிந்தவன் படத்தின் பர்ஸ்ட் சிங்கிளான வாடா தம்பி என்ற பாடல் வெளியாகியுள்ளது.

பாண்டிராஜ் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள படம் "எதற்கும் துணிந்தவன்". இந்தப் படத்தின் நாயகியாக பிரியங்கா அருள் மோகன் நடித்துள்ளார். மேலும் சத்யராஜ், சரண்யா பொன்வண்ணன், தேவதர்ஷினி, இளவரசு, சுப்பு பஞ்சு, திவ்யா துரைசாமி, ஜெயப்பிரகாஷ் உள்ளிட்ட பலர் சூர்யாவுடன் நடித்துள்ளனர்.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் பிப்ரவரி 4ஆம் திகதி வெளியாக இருக்கிறது. இந்நிலையில் இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் 'வாடா தம்பி...' என்ற பாடலை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். இந்த பாடல் ரசிகர்களை கவர்ந்து தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



# பல்சுவை கதம்பம்



## சோர்வான கண்களுக்கு புத்துணர்ச்சி தரும் சில அழகு குறிப்புக்கள் !!

தினசரி வீட்டில் இருந்தபடியே சில எளிய வழிமுறைகள் மூலமாக உங்கள் இயற்கையான அழகைத் தக்க வைத்துக்கொள்ளலாம். இரவு படுக்கைக்குச் செல்லும்முன் ஒரு பத்து, இருபது நிமிடங்கள் இதற்கு ஒதுக்கினாலே போதுமானது.

முகத்திற்கு பொலிவும், வசீகரமும் சேர்ப்பவை கண்கள். சிலருக்கு அந்த கண்களின் புருவத்தில் தேவையான அளவிற்கு முடி இருக்காது. இதற்கு சுத்தமான விளக்கெண்ணெய்யை கொஞ்சமாக எடுத்து புருவ முடிகளிலும், கண்முடிகளிலும் தேய்த்து வந்தால், முடி அடர்த்தியாக வளரும்.

சோர்வான கண்களுக்கு, ரோஸ் வாட்டரில் நனைத்த காட்டன் பேட், வட்டமாக வெட்டிய வெள்ளரித் துண்டு போன்றவற்றை கண்களின் மேல் வைத்துக்கொள்ளலாம்.

நன்றாகப் பொடியாக நறுக்கிய வெள்ளரித் துண்டுகளையோ அல்லது அதனுடன் கரட் ஜீஸைக் கலந்தோ கண்களுக்கு அடியில் தடவி வந்தால், கரு வளையங்கள் மறையும்.

கண்களை கடிகார முட்கள் நகருவதுபோல் வட்ட வடிவத்தில் சுழலவிட வேண்டும். பின்னர் எதிர்புறமாக கண்களை சுழல செய்ய வேண்டும். அவ்வாறு ஐந்து முறை செய்து வர வேண்டும்.

உள்ளங்கைக்குள் கண்களை மூடி பயிற்சி பெறுவது கண் சோர்வு, கண் வலி பிரச்சினையை குறைக்கும். கண் பார்வை திறனையும் மெருகேற்றும். கைகளை உரசி வெதுவெதுப்பு தன்மைக்கு மாற்றிவிட்டு கண்களை மூடி அதன் மேல் சூடான கைகளை வைத்தபடி சில நிமிடங்கள் அமைதியாக இருக்க வேண்டும். பின்னர் கண்களை திறந்து மெல்ல மூடி 5 முறை பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.



நீ தந்த வலிகளை தாங்கும்
சக்தி எனக்கில்லை
நீ தந்த வலிகள்
என்னவென்று
என் தூரிகையின் கீறல்கள்
கவிகள் சொல்லும்!!!
ஒன்று மட்டும் செய்துவிடாதே
நான் தனியே இருந்து
அழுவதுபோல் நீயும்
அழுதுவிடாதே – என்னை
ஆறுதல் படுத்த என் கவிதை
எப்போதும் இருக்கும்
உன்னை ஆறுதல் படுத்த
என்னை தவிர யாருமில்லையே!!!

## மக்காச்சோளத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் என்ன பயன்கள்...?

மஞ்சள் சோளத்தில் உள்ள நிறமிச்சத்து, பார்வைத்திறனை அதிகரிப்பது மட்டுமன்றி, தேகத்திற்கு பொலிவைக் கொடுக்கவும் உதவுகிறது. ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் முதன்மை சிற்றுண்டியாக சோளத்தை நாடலாம்.

சிறுவர் சிறுமிகளுக்கு விருப்ப சிற்றுண்டியாகவும் சோளம் மாறும் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்குப் பிடித்த மாதிரி சோளத்தை தயார் செய்து வழங்கலாம்.

மக்கா சோளத்தில் விட்டமின் பி சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக டயாமின் மற்றும் நியாசின் ஊட்டச்சத்துக்கள் இருக்கின்றன.


அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படுவது, ஞாபக மறதி நிலை மற்றும் தோல் சம்பந்தமான வியாதிகள் உடலில் நாசின் சத்து குறைபாட்டால் ஏற்படுகின்றது.

மக்கா சோளம் தொடர்ந்து தயாமின் மற்றும் நியாசின் சத்துக்கள் கிடைக்கப்பெற்று, மேற்கூறிய குறைபாடுகள் நீங்கி உடலை வலுப்படுத்தி ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது.

மக்கா சோளத்தை பச்சையாகவோ அல்லது வேக வைத்தோ சாப்பிடுவதால் நார்ச்சத்து நமக்கு முழுமையாக கிடைக்கின்றது. இதனால், மூல நோய் ஏற்படாமல் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மக்காச்சோளத்தில் சரியான அளவில் கார்போ ஹைட்ரேட் மற்றும் கலோரிகளை கொண்டது. மக்காச்சோளத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான அனைத்து சத்துக்களும் கிடைக்கும். மேலும் பார்வைக் கோளாறு ஏற்படாமல் தடுத்து கண்களை பாதுகாக்கும் தன்மை கொண்டது.

## கற்றாழையின் பயன்தரும் சில முக்கிய குறிப்புக்களை பார்ப்போம்...!!



முகம் கழுவுவதற்கும் கற்றாழைச் சோற்றைப் பயன்படுத்தலாம் என்றும் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். ஃபேஸ் மாஸ்க்காகவும் அதனைப் பயன்படுத்தலாம். இதனை தேங்காய் எண்ணெய்யுடன் கலந்தும் பயன்படுத்தலாம்.

கற்றாழையில் பல விட்டமின்களும் தாதுக்களும் உள்ளன. இது உடல் எடை குறைப்புக்கு உதவுகிறது என்று கருதப்படுகிறது. மேலும் இதிலுள்ள அமிலங்களும் நோதி உடல்நலத்தை மேம்படுத்துகின்றன என்றும் கூறப்படுகிறது.

கற்றாழையில் உள்ள புரோட்டியோலிட்டிக் நொதியானது, தலையின் சருமத்தில் உள்ள சேதமடைந்த செல்களை சரிப்படுத்த உதவுகிறது. முடி வளர்ச்சியையும் மேம்படுத்துகிறது. தலையில் பொடுகு மற்றும் அரிப்பு ஏற்படும் வாய்ப்பையும் குறைக்கிறது. சிறந்த கண்டிஷனராகவும் செயல்படுகிறது.

இருமல் மற்றும் ஜலதொஷத்தில் இருந்து நிவாரணம் பெறவும் கற்றாழை உதவுகிறது. கற்றாழை ஒரு மலமிளக்கியாகவும் செயல்படும் என்று கூறப்படுகிறது. இது செரிமானத்தை மேம்படுத்துகிறது என்றும் கூறப்படுகிறது.

கற்றாழையில் பூஞ்சை எதிர்ப்புப் பண்பு அதிகமுள்ளது. இதனால் வறண்டுபோன, அழற்சி உள்ள சருமத்தின் மீது இதனைப் பூசினால் நோய்த்தொற்றினால் ஏற்படும் அரிப்பு, எரிச்சல் போன்ற அறிகுறிகள் குறையும். எனினும், இதனைப் பயன்படுத்தும் முன்பு உங்கள் மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெறுவதே நல்லது.

கற்றாழைச் சோற்றை ஓட்மீல் மற்றும் பாடி லோஷனுடன் கலந்து பயன்படுத்தினால் மிகுந்த பலன்களைக் கொடுக்கும். அது இறந்த செல்களை அகற்றவும் பாதத்திற்கு ஈரப்பதத்தை அளிக்கவும் உதவுகிறது.

கற்றாழையில் பல இயற்கையான தாதுக்கள் உள்ளன. உங்கள் புருவங்களுக்கு அழகிய வடிவம் கொடுக்க அவை மிகவும் உதவும். கற்றாழைச் சோற்றையும் விளக்கெண்ணெய்யையும் சம அளவு கலந்து கொண்டு தினமும் புருவங்களில் பூசுங்கள். சில நாட்களில் வித்தியாசத்தைக் காணலாம்.

4ஆம் பக்க தொடர்ச்சி...

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற போது இலங்கையரசும் இராணுவமும் விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தமை ஆதாரபுர்வமான நிரூபிக்கப்படுகின்றது.

ஒரு இனத்தின் விடுதலைக்காகக போராடிய மாவீரர்களுக்கும் நினைவு அஞ்சலி செலுத்தக்கூடாது என்று குறித்த விடுதலைப்புலிகளை தடைசெய்திருப்பதும் எந்த வகையில் நியாயம் என்பதை அரச தரப்பு கூறவேண்டும். பூகோள அரசயில் நிலைப்பாட்டினை பல நாடுகள் இணைந்து விடுதலைப்புலிகளின் போராட்டத்தை முற்றுகைக்குள் கொண்டுவந்தனர். குறிப்பாக சீனா இந்தியா அமெரிக்கா இந்த நாடுகள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனது தலைமையில் இந்த இயக்கம் வலுபெறுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் கடல்.வான்.தரை என்று மட்டுமல்லாது 54 அரசியல் கட்டமைப்புக்களையும் விடுதலைப்புலிகள் கொண்டிருந்தனர். தனி இராச்சியத்தை நிறுவுவதற்கான அனைத்து வசதிகளும் அவர்களிடம் இருந்தது.

அது மட்டுமன்றி வடக்கு கிழக்கு அபிவிருத்தியடைந்த பகுதியாக மாறிவிட்டால் தமிழர்களுக்கு கொத்தடிமைகளாகபணிபுரியவேண்டும் என்கின்ற சிங்கள அரசின் நரித்தந்திரோபாயங்கள் இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதே நேரம் மீண்டும் அனைத்து ஒப்பந்தங்களும் கிடப்பில் போடப்பட்டு வடகிழக்கில் ஆங்காங்கே சிங்கள பேரினாவதிகள் தாக்குதல்களை நடத்தத்தெடங்கினர்.

குறித்த ஆசிய பசுபிக் நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு ஆயுத கொள்வனவுகளையும் வைத்துக்கொண்டு மாவிலாறில் ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் 2009.05.18இல் முற்றுகைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் இந்தப் போராட்த்தில் மடிந்த இரண்டு இலட்சம் பொதுமக்கள் ஐம்பதாயிரம் விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் நினைவுகூரக்கூடாது என்று மாறி மாறி வந்த அரசியல் தலைமைகள் கூறினாலும் இன்று அது கடுமையான சட்டதிட்டங்களுக்குள் உள்வாங்கபடப்டிருக்கிறது. ஆகவே இலங்கையரசு தமிழ் மக்களது தீர்வு விடயத்தை வழங்கப்போவதில்லை என்ற சமிக்ஞையையே இவ்விடயம் காட்டுகின்றது.

மீண்டும் அடக்குமுறை தொடருமானால் நவீன மயப்படுத்தப்பட்ட யுத்த சூனியத்துக்குள் தமிழினம் தமது தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை தொடர்பில் சிந்திக்கநேரிடும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்பதனையே நாம் இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம்.

# வட இலங்கையில் சீன வேடதாரிகள்

தமது வல்லரசு நலன்களை பேணுவதற்காக தமிழர்களின் மீது அதிக கரிசனையை அமெரிக்காவும் இந்தியாவும் அண்மைக் காலத்தில் காட்டுவதை தொடர்ந்து ஏட்டிக்கு போட்டியாக சீன தூதுவரும் ஏனைய சீன அதிகாரிகளும் வட பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளதுடன் அதன் உச்சக் கட்டமாக வேட்டி அணிந்து வேடதாரிகளாக நல்லூர் கோவில் பூஜையிலும் பங்கேற்று அதை ஊடகங்களில் பிரபலப்படுத்துவதற்காக நல்லூ ரானுக்கு புறமுதுகு காட்டி அவமதிக்கும் படமொன்றையும் வெளியிட்டு இருக்கிறார்கள். தமது சொந்த நாட்டில் மத சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சீனர்கள் இலங்கையில் மத அனுஷ்டானங்களை கைக்கொள்ளுகிறார்களாம் . போதாக்குறைக்கு வடபகுதி கடலை சூறையாடிக் கொண்டிருக்கும் சீனர்கள் வடபகுதி மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குகின்றார்களாம். ஏனைய அமெரிக்கா. ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் தூதர்கள் வட பகுதிக்கு வருவதற்கும் சீன தூதுவர் வருவதற்கும் அடிப்படையில் ஒரு பாரிய வேறுபாடு இருக்கிறது. அதாவது ஏனைய பல நாடுகள் கடந்த காலங்களிலும் தற்போதும் இலங்கையில் ஒரு இனப்பிரச்சினை இருக்கிறது சிறுபான்மையினருக்கு பாரபட்சம் இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு அதற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சில் மற்றும் ஏனைய சர்வதேச கூட்டங்களிலும் குரல் எழுப்பி இருக்கின்றன. ஆனால் சீனா இலங்கையில் சிறுபான்மையினருக்காகவோ மனித உரிமைகளுக்காகவோ எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குரல் கொடுக்கவில்லை. மாறாக கடந்த காலத்தில் பேரினவாதத்துடன் இணைந்து சிறுபான்மை தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை நசுக்குவதற்காக முதன்மைப் பங்காளியாக செயல்பட்டிருக்கிறது. இப்போது முழு இலங்கையையும் சுரண்டி வளங்களை அபகரிப்பதற்கு பல்வேறு சதி திட்டங்களை இயக்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே வட பகுதி விஜயமும் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. பல தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளும் தமிழ் ஊடகவியலாளர்களும் அண்மைக் காலங்களில் அடிக்கடி சீனாவுக்கு சென்றுவரும் நிலையில் தமிழ் பேசும் மக்கள் சீனாவின் சதி திட்டங்கள் குறித்து அவதானமாக இருப்பது மிகவும் அவசியம்.

சீனா உண்மையாக நேர்மையாக இலங்கையின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் துணை போவதானால் பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுக்கவேண்டும்

**1. நிலங்கள் தனியருக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ சொந்தமாக இருப்பதனால் அதனை சீனர்கள் வாங்கலாம் விற்கலாம். ஆனால் கடற்கரையும் அதை அண்டிய கடலும் அந்த பகுதியில் தொன்று தொட்டு மீன் பிடித்துவரும் மீனவர்களுக்கு சொந்தமானது. எனவே பூநகரி உட்பட்ட இலங்கையின் மீனவர்களுக்கு சொந்தமான கடலில் அவர்களை வெளியேற்றி கடலட்டை வளர்ப்பது போன்ற செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.**

**2. நச்சுக் கிருமிகள் நிறைந்த சேதன உரத்தை இலங்கைக்குள் செலுத்த முயல்வது இல்லாவிட்டால் ஒப்பந்தம் என்ற பெயரில் ஏமாற்றி கிருமி உரத்துக்காக இலங்கையிடம் இருந்து நட்டஈடு பெறுவது நிறுத்தப்பட வேண்டும். கிருமி உரத்துக்காக பல ஆயிரம் வறிய இலங்கை மக்களின் நிவாரணத்துக்கு பயன்படக் கூடிய பல பில்லியன் டொலர்களை இலங்கையிடம் இருந்து அநியாயமாக அபகரித்துக் கொண்டு சில மீனவர்களுக்கு சில ஆயிரம் ரூபாய் பெறுமதியான நிவாரணத்தை தருவதைக் கண்டு மகிழ இலங்கையர்கள் ஒன்றும் இளிச்சவாயர்கள் இல்லை என்பதை சீனா உணர்ந்து கொள்ள வேண்டும்.**

**3. இலங்கையில் கட்டுமானப்பணி உட்பட்ட சீன முதலீட்டுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் இலங்கையருக்கு குறைந்த பட்சம்** 50% **வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அதை விடுத்து முற்றுமுழுதாக சீனாவில் இருந்து சிறைக்கைதிகள் மற்றும் தொழிலாளர்களை கொண்டுவந்து மேற்கொள்ளப்படும் திட்டங்களினால் இலங்கை மக்களுக்கும் அவர்களின் பொருளாதாரத்துக்கும் எந்தவித நலனும் இல்லாத நிலையில் அந்த திட்டங்களை இலங்கையின் பொருளாதாரத்தை சுரண்டி கடன் சுமையை அதிகரிக்கும் செயல்பாடாகவே இலங்கை மக்கள் கருதுவார்கள் என்பதை சீனா உணர்ந்து கொள்ள வேண்டும்.**

இனியாவது சீனா திருந்தி இலங்கையின் அபிவிருத்திப் பங்காளியாக வருமா அல்லது தொடர்ந்து தனது சதிச்செயல்கள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை சுரண்டி ஷேஸ்பியரின் நாடகத்தில் வரும் இரக்கமற்ற வியாபாரி ஷைலாக் போல செயல்படுமா என்பதை எதிர்காலம் விரைவில் வெளிப்படுத்தும்.

Dr. **முரளி வல்லிபுரநாதன்**





# நம்ப முடியாத சில சுவாரஸ்யமான உண்மைகள்!

**1. கை,கால் விரல்களிலிருந்து சுடக்கு சத்தம் ஏன் கேட்கிறது என்று தெரியுமா? இந்த சத்தம் உங்கள் எலும்பில் இருந்து வருவது கிடையாது. அந்தப் பகுதிகளில் இருக்கும் நைட்ரஜன் வாயு குமிழ்கள் (Nitrogen Gas Bubbles) வெடிப்பதனால் சுடக்கு சத்தம் நமக்கு கேட்கிறது.**

**2. தென் கொரியாவாவை சேர்ந்த** Kim Ungyong **என்பவர் தனது 3 வயதிலேயே கொரியன், ஜெர்மன், ஆங்கிலம் மற்றும் ஜப்பானியம் என 4 மொழிகளையும், கால்குலஸ் கணக்குகளையும் கற்றுக்கொண்டார். 4 வயதில் இயற்பியல் துறை விருந்தினர் மாணவராக ஹன்யாங் பல்கலைக்கழகம் இவரை அழைத்தது. 7 வயதில் அமெரிக்காவுக்கு நாசா இவரை அழைத்தது. இறுதியாக 15 வயதில் தனது Ph.D பட்டத்தை பெற்றார். கின்னஸ் புத்தகத்தில் அதிக IQ திறன் கொண்டவர்கள் பட்டியலில் இவர் இடம்பெற்றுள்ளார்.**

**3. உலகின் மிக உயரமான ரயில் பாலம் ஜம்மு-காஷ்மீரில் உள்ள செனாப் பாலம். செனாப் ஆறுக்கு மேலே 1178 அடி உயரத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.**

**4. ஆஸ்கர் விருதைப் பெற்ற முதல் மனிதர் அல்லாத திரை கதாபாத்திரம் மிக்கி மவுஸ்.**

**5. பெண்களின் மூளையை விட ஆண்களின் மூளை 10 சதவீதம் பெரியது. ஆனால் ஆண்களின் மூளையை விட பெண்களின் மூளையின் செயல்திறன் அதிகம்.**

**6.** Krista **மற்றும் Tatiyana Hogan இருவரும் கனடா நாட்டை சேர்ந்த தலைகள் இணைந்த இரட்டையர்கள். இவர்களில் ஒருவர் கண்களால் பார்ப்பது, மனதில் நினைப்பது எல்லாம் இன்னொருவருக்கும் தெரியுமாம்..!**

**7. காதில் உள்ள ஸ்டாப்ஸ் (**Stapes**) என்ற எலும்பு தான் மனித உடலில் மிகவும் சிறிய எலும்பு ஆகும்.**


**8. துபாயில் உள்ள பாம் ஜீமேரா தீவு தான் உலகிலேயே மிகப்பெரிய மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கை தீவு ஆகும். இந்தத் தீவு ஒரு பனை மரத்தின் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது.**

**9. மனிதனால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் செம்பு. மனிதர்கள் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே செம்பை பயன்படுத்தி வருவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.**

# காதல் உலகத்தின் தேசிய ஜோதி

காதல் ஒரு ஓவியம். காதலர்கள் அதை கண்களால் வரைகிறார்கள். தேசமெங்கும் காதல் இருந்தாலும் காதல் என்னும் தேசத்திற்குள் நுழைந்துவிடும் போது காதலர்கள் தேசத்தையே மறந்துவிடுகிறார்கள். வாழ்க்கையின் நுழைவாயிலில் நின்றுகொண்டிருக்கும் காலங்களில் ஒருவர் மீது ஒருவருக்குள் ஏற்பட்டுப்போகும் நம்பிக்கைகளினால் எழுப்பப்படும் உயர்ந்த உன்னத உறுதியான தூண் தான் காதல். காதலின் சாலைகளில் போக்குவரத்து நெரிசலாய் சில தடைகள் ஏற்படலாம். வாகனங்களை திசைமாற்றும் போக்குவரத்துப் பொலீஸ்காரர்கள் போல் சில காதலர் வாழ்க்கையை இந்த சமூகம் திசை மாற்றலாம். அதனால் தொடமுடியாத தொலைவில் சென்று தொடவேண்டிய இதயம் தொலைந்து போனாலும் சூரியனைச் சுற்றியே சூரிய திசைக்குள் முகம் வைக்கும் சூரியகாந்தியை போல் அந்த இதயத்தை தேடியே தன் ஜீவிதத்தை ஓட்டும். காதல் ஒரு நதிநீரைப் போன்றது. அது இரு கரைகளுக்கு நடுவே ஓடும் நீரானது நதியைப் புனிதமாக்குவது போல் இரு மனங்களுக்கிடையே வாழும் காதலானது வாழ்வை புனிதப்படுத்துகிறது. உண்மைக் காதல் வாழும் இதயமானது ஒரு நாயைப் போன்றது என்றாலும் பொருந்தும். அதனால் தான் அது தன் உயிர்க் காதலுக்குரியவரிடம் எப்போதும் நினைவு என்னும் வாலை ஆட்டிக்கொண்டே இருக்கிறது.

காதல் ஒரு பேய் மாதிரி எல்லோரும் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள் சிலருக்குத்தான் அது தெரியும் என்று மேல் நாட்டு மேதை "லேரோச்சி போகால்ட்" கூறியுள்ளார். நாய் கண்ணுக்குத்தான் பேய் தெரியும் என்னும் நம் நாட்டு வழக்கிற்கொப்ப ஒரு மனம் நாயாக மாறும் போது தான் பேயானக் காதலைக்கண்டு பிடிக்கின்றது. ஆனால் நாய்க்கும் பேய்க்கும் நிஜத்தில் நட்புறவு இல்லாத போதும் காதலில் நாயும் பேயும் நற்புறவாகும் அதிசயம் நிகழும். இன்றைய காலக்கட்டத்தில் காதலர் தினத்தன்று எஸ்.எம்.எஸ் என்னும் குறுஞ்செய்தி, மின்னஞ்சல், மற்றும் நவீன கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி பூச்செண்டோடு காதல் வேட்டை நடாத்தும் வேட்கை இளைஞர் யுவதிகளிடையே பரவிக்கிடக்கிறது. உண்மையில் காதல் பெப்ரவரி பதின்நான்கில் திடீரென்றுப் பூக்கும் மின்னல் பூவல்ல. அது கன்னல் பூ காலங்கள் கடந்தும் வாடாமல் வாசனை வீசப்போகும் அது ஒருபோதும் யோசனை செய்தும் வருவதில்லை. ஒரு சூறாவளியைப்போல் சுழன்று வந்து காதல் பூங்காவை சாய்த்து ஓய்வதும் இல்லை. எப்போது பூக்க வேண்டும் என்று காலத்திற்கேற்ப பூக்கும் பூவாய் வருஷம் மாதம் திகதி பார்த்துப் பூக்காமல் எப்போதாவது பூத்துவிடுவது தான் காதலாகும். ஆனால் அது எப்போது என்பதுதான் அந்தக் காதலுக்கும் புரியாத புதிர். இதனால்தான் காதல் காதலுக்கும் புரியாத புதிர். இதனால் தான் காதல் பார்த்ததும் வருவதில்லை என்று அறிஞர் "கிறிஸ்டோபர் மர்லோவ்" கூறியுள்ளார் போலும். காதல் கொண்ட இதயங்கள் கனவுகளைச் சுமந்து கைகூடும் காலத்துக்காக ஆளுக்கொரு திசையில் ஆமை வேகத்தில் ஊமை சோகத்தால் தவங்கிடக்கலாம். சில காதலர்களின் வாழ்வோ சோக மேகங்களுக்குள் மறைக்கப்பட்ட நிலவாகிக்கிடக்கலாம். என்றாலும் வானத்தினின்று விழும் மழைத்துளியைப் பருகி வாழும் சாதகபட்சியைபோல இதய வானத்துள் பொழியும் நினைவு தழைத்துளியை சுமந்து காதல் வாழும். காதலை மட்டுமே சுவாசிக்கும் இதயங்களுக்கு காதலில் ஏற்படும் தடைகள் ஒருபோதும் விலங்கிவிடுவதில்லை. வாழ்க்கைக்காக காதலை தேர்வு செய்யாமல் காதலுக்காக வாழ்க்கையை அர்ப்பணம் செய்பவர்களைப் பார்த்துதான் மகாத்மா காந்தியே காதல் எங்கு இருக்கிறதோ அங்கு தான் வாழ்க்கை இருக்கிறது என்று கூறியுள்ளார். அதனால் நாம் எல்லோரும் காதலிக்க வேண்டும். காதலால் தான் வாழ்க்கை என்னும் நிலவுக்கு ஒளி கிடைக்கிறது.



வாழ்க்கையை நாம் காதலிக்கும் போது தான் அது நம்மை காதலிக்காதவர் யார் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காதலில் மூழ்கியவர்களே...! இப்படிப்பட்டவர்களைப் பார்த்துதான் காதலிக்காதவர் யாரும் இல்லை காதலை வெளிப்படுத்தாதவர்கள் வேண்டுமானால் இருக்கலாம் என்று "ஷேக்ஸ்பியர்" கூறியுள்ளார்.

காதல் என்பது **"shaking beer"** போல் இருக்க வேண்டும். குலுக்கப்பட்ட "beer" (Beer என்றதும் போதைக்காக குடிக்கப்படும் மதுவை மாத்திரம் கணக்கில் கொள்ளவேண்டாம் அல்கஹோல் இல்லாத BEER வகைகளும் உண்டு) எப்படிக் குப்பியில் தன்குவதில்லையோ அதுபோல் நம்முள்ளத்தைக் குலுக்கிய பொங்கும் காதல் என்னும் திரவம் சேர வேண்டிய இதயத்தைச் சென்று சேர்ந்து விடவேண்டும். அப்படி அடைந்துவிட்டால் மாத்திரம் அது பூரணத்துவம் பெற்றகாதல் அல்ல. "அலெக்ஸாண்டர் ஸ்மித்" என்னும் மேதையின் கூற்றுப்போல நம்மை இன்னொருவரிடத்தில் கண்டு பிடிக்கும் காதலானது. "செயின்ட் எக்ஸ் யுபெரி" எனும் பேரறிஞரின் கூற்றான "இணைகின்ற இருவருக்கும் இந்த உலகம் ஒன்றாகத் தெரிந்தால் தான் அது காதல்" என்பதாக வேண்டும்.

கண்களில் வழியே மௌனம் பேசி இதயத்தில் இனிக்கும் பிரபஞ்சத்தின் தேசிய வெளிச்சம் காதல். காதல் இல்லாத இதயம் வாழ்வின் தேன் துளிகளை சுவைக்கத் தெரியாத கருப்பு வண்ணாத்தி. காதலைப்பற்றி எழுத எழுத அது இன்ப ஊற்றாகச் சுரக்கிறது. காதலைப்பற்றி பேசப் பேச அது தித்திப்பை அள்ளி அள்ளி சொரிகிறது. ஒன்றை எதிர்பார்த்து ஒன்றை செய்யும் இந்த உலகத்தில் எதையும் எதிர்பாராமல் வருவது காதல் ஒன்று தான். காதல் காதலை மட்டுமே எதிர்பார்க்கிறது. காதலை காதலால் காணத்தெரியாத கருப்பு இதயம் படைத்தவர்களால் காதல் பல கஷ்டங்களை எதிர்நோக்குகிறது. துன்பங்களையும் துயரங்களையும் கடந்த காதல் ஒன்றே இன்பம் என்னும் தேனாற்றில் மீனாய் நீந்துகிறது.

காதல் செய்யாதவரைக் காதலித்தாலும் அது காதல் தான். சட்டத்திட்டத்திற்கு உட்பட்டதோ சம்பிரதாயங்களுக்கு கட்டுப்படுவதோ சர்வாதிகாரங்களுக்குள் அடங்கிப் போவதோ காதலின் அகராதியில் இல்லாத வாக்கியங்கள். இவைகளுக்கேற்ப மாறிக்கொள்வது ஒரு உண்மையான காதலும் இல்லை. காதலுக்கு ஒரு மனம் ஒரு குணம் இருந்தால் போதும் திகதி பாராமல் மலரும் பூவைப்போல ஜாதி பாராமல் மலரும் காதல் நீதி சொல்பவனையும் போதிக்கும் காதல் புத்தனாக்கும்.

காதலின் சிற்பங்களைச் செதுக்கும் சிற்பிகள்தான் காதலர்கள். ஆம்கற்களோ உளியோ இல்லாமலும் சொற்களோ மொழியோ இல்லாமலும் கௌரவமான தங்கள் காதலையே ஆத்மாவுக்குள் செதுக்கி வைக்கும் அற்புதச் சிற்பிகள் காதலர்களே..! முற்களின் நுனியிலும் பனித்துளியாய் உட்காரும் மென்மை காதலுக்கு மட்டுமே முடிந்த காரியம். பூக்களின் நறுமணம் போலவும் அலைகளின் புன்னகை போலவும் இடம் மாறினாலும் நிலைமாறாதது காதல். மாளிகைகளையும் கூட வேர்களால் ஊடுருவிச் சித்திக்கும் போதி மரங்களைப்போல மனசுக்குள் வேர் விடுகின்ற காதலானது காதலுக்குரியவரிடம் சென்றடையும் வேளை ஏற்றுக்கொள்ளாமைகளால் இதயத்தைச் சிதைக்கவும் கூடும். இங்கே காதல் கோட்டை சிதைந்தாலும் காலங்கள் கடந்தும் காதலின் நினைவுகளின் பசுமையை மனசுக்குள் அசைபோடும் காதலர்களை காண்கிறோம். காதல் கைகூடிய பின்னர் இணைந்த காதலைப்பற்றி பேச மறுப்போரை கூட காண்கிறோம். ஆனால் ஒருமுறை காதல் வயப்பட்ட பின்னர் அந்தக் காதலை இதயத்தில் இருந்து தூக்கி எரிந்துவிட்டு வாழ்பவர் எவரையும் காணவே முடியாது. இதழ்களால் காதலுக்கு எதிர்ப்பு கோஷம் எழுப்பிவிட்டு இதயத்தை காதல் குடித்தனம் நடத்த வாடகைக்கு கொடுத்திருக்கும் வெளிவேஷதாரிகளுக்கும் காதல் அவர்களின் ஜீவனுக்குள் ஜீவித்துக்கொண்டுதானிருக்கும்.

வேலிக்காக முள்ளைப் போட்டு தடுக்கும் மனிதன், முள்ளுக்கு வேலிபோட்டுக் காவல் காப்பதில்லை எப்படியோ அப்படித்தான் காதலில் அடிபட்ட இதயங்களின் வடிவங்களும் அநியாயத்தையும் அட்டூழியங்களையும், அகம் பாவத்தையும், ஆத்திரத்தையும், ஆணவத்தையும் நேசிக்கப் பழகிக்கொண்ட பின்னர் ஆயுதங்களையும் நேசித்த மனிதன் இறுதியில் அழிவை நேசிக்கத் தொடங்கியதால் தான் இன்று பூமியில் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் விசுவாசத்திலும் விஷவாசம் வீசுகிறது.

காதலால் இந்த உலகம் சாதித்த சாதனைகளை சற்று மனிதன் சிந்திக்கத் தொடங்குவானானால் ஆயுதங்களை அழித்துவிட்டு குரோதம் விளைந்த மனதில் விரோதம் இன்றிக் காதலை விதைப்பான். அப்படி விதைக்கும் காதல் செடி வளர்ந்து பூ பூக்கும் போது அந்த பூவின் மணமானது எந்த ரணத்தையும் குணமாக்கும். எனவே நாளை உலகப் பூங்காவில் காதல் என்னும் மாபெரும் மகிழ்ச்சிப் பூப்பூக்க பிணமான மனங்களையும் ஒன்று கூட்டி காதலைப் போதிப்போம் வாழ்க்கை என்னும். நந்தவனத்துள் காதல் என்னும் பூவின்றி கண்ணீர் வடிக்கும் மனிதத்தின் வேர்களில் நம்பிக்கை என்னும் நீர் வார்த்து செழிக்க வைப்போம். அந்த செழிப்பின் மகிழ்வை கொண்டு சீரழியும் இந்த உலகின் இருண்ட பக்கத்தை வெளிச்சமாக்க காதலை இயத்தின் தேசிய ஜோதியாக்குவோம். இந்த ஜோதியின் வெளிச்சத்தில் காதலின் சோலையில் இன்னும் கொண்டாடப்படாத காதலுக்கு திருவிழா எடுப்பதே காதலர் வாழ்வின் கட்டாயம்.

**நடராஜ் மையன்**

# இலங்கையில் இடம்பெறும் தொடர் ஆர்ப்பாட்டங்களும் திணறும் அரசும்

உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் ஆளும் கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் மக்களும் என பல வகைகளிலும் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் இடம்பெற்றுவரும் நிலையில் பல போராட்டங்கள் எதற்காக முன்னெடுக்கப்படுகின்றதோ அது வெற்றியடைந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்துடன் அவ் போராட்டங்கள் ஆளும் அரசுகளால் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்ட சம்பவங்களும் உள்ளன. அண்மைக்காலமாக உலகில் மிகப்பெரும் ஜனநாயக நாடாக உள்ள இந்தியாவில் விவசாயிகள் போராட்டம் மாநிலங்களில் இருந்து மத்திய அரசை நோக்கி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இவ் விவசாயிகளின் போராட்டத்தில் பல அப்பாவி விவசாயிகள் பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

போராட்டத்திற்கு தற்பொழுது ஓர் வெற்றி கிடைத்தாலும் விவசாயிகள் தொடர்ந்து அங்கு போராடி வருகின்றனர். இந்நிலையில் இலங்கையில் அரசுக்கெதிரான போராட்டங்கள் பல்வேறு ஆட்சிக்காலங்களில் இடம்பெற்றது. குறிப்பாக கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற இனவாதப் போரின் போது அக்காலகட்டங்களில் ஆட்சி செய்து அரசுகளால் தமிழ் மக்களுக்கெதிரான பொருளாதாரத் தடைகள், குண்டு வீச்சுக்கள் படுகொலைகள், பல்கலைக்கழக தரப்படுத்தல்கள் என பல்வேறு செயற்பாடுகளுக்கெதிராக பல ஆர்ப்பாட்டங்கள் பல பேரணிகள் பல மகஜர் கையளிப்புக்கள் உண்ணாநோன்பு போராட்டங்கள் என பல்வேறு வழிகளில் தமிழ் மக்கள் அக்காலங்களில் எதிர்ப்பை வெளியிட்டு வந்துள்ளனர். இதற்கெல்லாம் அக்காலங்களில் ஆட்சிசெய்த அரசுகளால் எதுவித பதில்களும் கிடைக்கவில்லை என்பதே உண்மை. இந்நிலையில் 2009 யுத்தம் முடிவுற்றதன் பின்னர் 2018இல் நல்லாட்சிக்கு எதிராக களமிறங்கி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் ஆட்சிபீடம் ஏறிய காலப்பகுதியில் இருந்து கொரோனா என்னும் கொடிய வைரஸ் உலகை ஆட்டிப்படைத்த நிலையில் அது இலங்கையையும் விட்டுவைக்கவில்லை.

இக்கொரோனா வைரசுக்கு எதிராக இலங்கை அரசு கடும் போராட்டத்தை நடத்திவரும் நிலையில் நாட்டில் 80% வீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதுடன் தற்பொழுது கொரோனாவின் 3 ஆம் அலை கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டுள்ளது. இவ் கொரோனா 3வது அலையிலும் மொத்தமாக 5 இலட்சத்து 80 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 16000 பேருக்கு மேல் மரணித்தும் உள்ளனர். இதனை விட கடந்த இரண்டு வருடங்களாக நாடு முடக்கப்படுவதும் இயல்பு நிலைக்கு கொண்டு வரப்படுவதும் என மாறி மாறி இடம்பெற்று வந்த நிலையில், மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கியுள்ளது.

இதில் முக்கிய காரணமாக டொலர் வீழ்ச்சி. டொலர் தட்டுப்பாடு என ஒரு பக்கம் இந்நிலை நீடித்து வரும் நிலையில் பொருட்களின் விலைகள் ஆகாயத்தை தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளது. அத்துடன் இவ்வாறான ஓர் நெருக்கடி நிலையில் அரசுக்கெதிராக ஆசிரிய அதிபர் தொழிற்சங்கங்கள் சம்பள முரண்பாடு தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பணி பகிஸ்கரிப்பு போராட்டம் கொரோனா தடைகளுக்கு மத்தியிலும் இடம்பெற்றது.

பல்வேறு ஆர்ப்பாட்ட பேரணிகளும் இடம்பெற்றன. அவ் ஆர்ப்பாட்ட பேரணிகள் இலங்கை அரசால் கடுமையாக அடக்கப்பட்டதுடன் அதற்கு தலைமைதாங்கிய ஆசிரிய அதிபர் சங்கங்களின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் போராட்டங்கள் மிக மோசமாக மாறிய நிலையில் அரசால் அவர் விடுவிக்கப்பட்டார். அப்போதிருந்த கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் சுமுகமாக தீர்க்க முடியாத நிலையில் ஜனாதிபதி அவர்கள் உடனடியாக கல்வி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு வெளிவிவகார அமைச்சு பதவி வழங்கப்பட்டது. வெளிவிவகார அமைச்சராக இருந்த தினேஸ் குணவர்த்தன கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அத்துடன் இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதமரை சந்தித்து கதைப்பதற்கு அனுமதி கேட்டநிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவர்கள்சந்தித்துபிரச்சினைக்குசுமுகமான முறையில் தீர்வு வழங்கப்பட்டதுடன் சம்பள முரண்பாடானது பட்ஜட் ஊடாக தீர்த்துவைக்கப்பட்ட நிலையில் போராட்டம் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து அடுத்த போராட்டம் வெடித்தது. இது நாட்டின் முதுகெலும்பான விவசாயம் சம்பந்தமான போராட்டம். இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் உர இறக்குமதிக்கு தடைவிதித்த நிலையில் விவசாயிகள் அதற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகள் விதைப்பு காலமானதால் மிகவும் அசௌகரியங்களை சந்தித்தனர். ஜனாதிபதி அவர்கள் இந்தியாவில் இருந்து நைட்ரஜன் திரவ உரத்தை இறக்குமதி செய்து அதனை விவசாயிகளிடம் கையளித்தார். இரசாயன உரப் பாவனையை முற்றாக தடுக்கும் நோக்குடனேயே இவ் உரத் தடை கொண்டு வரப்பட்டது. மேலும் உர இறக்குமதியில் செலவாகும் அந்நிய செலவாணியை மிச்சப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கையாக கூறப்பட்டது.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட நைற்றஜன் திரவ உரத்தால் நெல் பயிர்களுக்கு குறிப்பிடத்தக்களவு பிரயோசனம் கிடைக்கவில்லை என விவசாயிகள் குற்றம் சுமத்தியதுடன் கொழும்பு நோக்கி புறப்பட்ட விவசாயிகளின் பேரணிகள் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் கொவிட் அலை முன்னிறுத்தி பலத்த தடைகள் போடப்பட்டதுடன் பலர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறான ஓர் நிலையில் இறுதியில் அரசு உர இறக்குமதிக்கான தடையை நீக்கியது. ஆனால் வர்த்தமானி அறிவிப்பு வெளிவரவில்லை. அத்துடன் நாட்டுக்குள் உரம் வர இன்னும் மூன்று மாதங்கள் செல்லும் எனக் கூறப்பட்டுள்ளது. தற்பொழுது பெரும்போக நெற்செய்கை இடம்பெற்று வரும் நிலையில் அறுவடைக்கு பின்னர் தான் உரம் வர உள்ளது என இம்முறை பெரும்போக நெல்சாகுபடி பெரும் வீழ்ச்சியை சந்திக்கும். இதனால் வரும் வருடம் அரிசிக்கான தட்டுப்பாடு மிக மோசமாக இருக்கும் என்பதுடன்



அரிசியின் விலை விண்ணைத் தொடும் அளவுக்கு செல்லும். மிகப்பெரும் அரிசி நெருக்கடிக்கு நாட்டு மக்கள் முகங்கொடுக்க உள்ள நிலையில் அரசானது அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்படும். ஏனைய காலங்களில் இறக்குமதி செய்ததை விட இப்பொழுது மிக அதிகளவில் இறக்குமதி செய்ய வேண்டி வரும். இதனால் மிகப்பெரும் அந்நிய செலவாணி இழப்பு ஏற்படும் என்பது உறுதி.

இதெல்லாம் இடம்பெற்றுவரும் நிலையில் நாட்டில் மிக மோசமான வெடிப்பு சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. அதாவது எரிவாயு சிலிண்டர்கள் நாடு முழுவதும் திடீர் திடீரென வெடித்து சிதறுகின்றன. இதில் ஒருவர் உயிரிழந்த நிலையில் சிலர் காயமடைந்துள்ளதுடன் பாரிய சேதங்களும் ஏற்பட்டுள்ளன. இவ்வளவு காலமும் இடம்பெறாமல் தற்பொழுது இது ஓர் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது தற்காலிகமாக எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்வது நிறுத்தப்பட்டுள்ளதாக லிற்றோ எரிவாயு நிறுவனம் நிறுத்தியுள்ளது.

இவ்வாறு எரிவாயு சிலிண்டர் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் எரிவாயு சிலிண்டர்கள் நிறுத்தப்படுமானால் நாட்டிலுள்ள பெரும்பாலான உணவகங்கள் மூடப்படும் நிலை ஏற்படப்போவதாக உணவக உரிமையாளர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. இதனால் பலர் வேலை வாய்ப்பை இழக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இது ஒருபுறமிருக்க நாட்டில் கடந்த சில தினங்களாக மின்சாரம் நாடளாவிய ரீதியில் தடைப்பட்டு வருகின்றது. இது மிகப் பெரும் சங்கட நிலையை அரசுக்கு தோற்றுவித்துள்ளது. இதற்குப் பின்னால் சதி உள்ளதா என விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது தொடருமானால் நாடு இருளில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

நாட்டில் மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு விலையேற்றம் உள்ள நிலையில் பல பொருட்கள் சந்தையில் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. மா. சீனி. பால்மா வகைகள் என்பன பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் நாட்டில் உள்ள சகல இன மக்களும் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். அத்துடன் ஒவ்வொரு பொருட்களுக்கும் நீண்ட வரிசையில் மக்கள் காத்து நிற்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் மக்களுக்கு எதுவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என்ற பாரிய குற்றச்சாட்டு அனைவராலும் முன்வைக்கப்படுகின்றது. இலங்கையில் பெரும்பாலான மக்கள் தமது உணவாக உட்கொள்ளும் பாணின் விலை கூட ஒரு இறாத்தல் 80 ரூபாவாகக் காணப்படுகிறது. இப் பாணின் விலையை 100 ரூபாவாக உயர்த்தப்படவேண்டும் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தி வருகின்றது. அரசால் அத்தியாவசியப் பொருட்களின் விலை தொடர்பாக வெளியிடப்படும் வர்த்தமானிகள் செயலற்றுக் காணப்படுவதாகவும் பெரும்பாலான வர்த்தகர்கள் இவ் வர்த்தமானியை ஒரு பொருட்டாக மதிக்காமல் தமது வசதிக்கேற்ப பொருட்களின் விலையை உயர்த்துவதாக மக்கள் விசனம் வெளியிடுகின்றனர். இவ்வாறு அரசு பல போராட்டங்களுக்கு முகங்கொடுக்கும் நிலையில் எதிர்காலத்தில் நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க முடியாமல் அரசுக்கெதிராக வீதியில் இறங்கும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை.

எனவே அரசு உடனடியாக மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதுடன் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்ட பேரணிகள், தொடர் போராட்டங்கள் என்பவற்றின் உண்மைத்தன்மை நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து. ஆக்கபூர்வமாக சிந்தித்து உடனடித் தீர்வை வழங்கி இவ் தொடர் போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் எதிர்க்கட்சிகளும் நாட்டின் நிலைமையை புரிந்துகொண்டு கொரோனா வைரசின் தாக்க நிலையை புரிந்துகொண்டு போராட்டங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சியை பயன்படுத்தி சுயநல அரசியல் மேற்கொள்ள வேண்டாம் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மக்களும் நாட்டின் நிலையை புரிந்துகொண்டு சுய பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி தமது தேவையை பூர்த்தி செய்வதுடன் நாட்டின் வளத்தையும் பெருக்கமுடியும். எனவே ஓர் இக்கட்டான சூழ்நிலையைப் புரிந்துகொண்டு இதனை முறியடிக்க அனைவரும் இணைந்து செயற்படுவோம். விடியும் எதிர்கால திசையை நோக்கிப் பயணிப்போம்.

**தாயகத்தான்**

# விளையாட்டு செய்திகள்

## கிரிக்கெட் வீரர்களுக்கு கொரோனா - தொடர் ஒத்திவைப்பு!

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் அடுத்தாண்டு ஜுன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மேலும் 5 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த அணி டிசம்பர் 9 இல் பாகிஸ்தானின் கராச்சி வந்ததிலிருந்து இதுவரை 9 பேருக்கு தொற்று பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் மேலும் தெரிவித்தது: "வியாழக்கிழமை காலை மீதமுள்ள 15 மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் மற்றும் உதவியாளர்கள் 6 பேருக்கு ஆர்டி பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த 21 பேருக்கும் தொற்று பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இதனால், டி20 ஆட்டம் திட்டமிட்டபடி வியாழக்கிழமை நடைபெற்றது. எனினும், இரு அணிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு, மேற்கிந்தியத் தீவுகளிடமுள்ள வளங்களையும் கருத்தில் கொண்டு ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பை சூப்பர் லீக் அங்கமான இந்த ஒருநாள் தொடரை ஜுன் 2022 தொடக்கத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது." புதன் மற்றும் வியாழன் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகளில் தொற்று பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட நபர்கள் மட்டுமே கராச்சி டி20 ஆட்டத்துக்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து புறப்படுகின்றனர். மற்றவர்கள் தனிமைக் காலத்தை முடித்த பிறகே புறப்படுவார்கள்.



## மட்டு நகரிற்கு பெருமை சேர்த்திருக்கும் லாபிர்

கொழும்பு சுகததாஸ மைதானத்தில் கடந்த 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெற்று முடிந்திருக்கும், மாஸ்டர் அத்லடிக் (Matser Athletic Sri Lanka) வருடாந்த தடகள விளையாட்டு விழாவில் ஏறாவூரினைச் சேர்ந்த லாபிர் ஒரு தங்கம், ஒரு வெள்ளி என இரண்டு பதக்கங்களை வென்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கும், தனது பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்திருக்கின்றார்.

அந்தவகையில் லாபிர் மாஸ்டர் அத்லடிக் தடகள நிகழ்வில் 65 தொடக்கம் 70 வயதுப் பிரிவில் ஒழுங்கு செய்யப்பட்ட 200 மீற்றர் ஓட்டப்பந்தய நிகழ்வில் தங்கம் வென்றதோடு, அதே வயதுப் பிரிவில் இடம்பெற்றிருந்த 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் லாபிர் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தினை 15.06 செக்கன்களில் நிறைவு செய்திருந்ததுடன், தங்கம் வென்ற 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தினை 31 செக்கன்களில் நிறைவு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சிறு வயது முதலே ஓட்டப்பந்தயம் உள்ளடங்கலாக பல்வேறு விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டியிருக்கும் 65 வயது நிரம்பிய லாபிர் தான் வென்ற இரண்டு பதக்கங்களின் மூலம் சாதிப்பதற்கு வயது ஒரு தடையல்ல என்பதனையும் அனைவருக்கும் உணர்த்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான (2021) மாஸ்டர் அத்லடிக் தடகள விளையாட்டு விழாவானது, நாடு பூராகவும் இருக்கும் 35 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட வீரர்களின் திறமைகளை வெளிக்காட்டும் நோக்கத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கிரிக்கெட் போட்டிகளில் இருந்து கோலி விலகல்?

ஒருநாள் தொடரிலிருந்து விலகுவதாக விராட் கோலியிடம் இருந்து எவ்வித தகவலும் வரவில்லை என பிசிசிஐ தரப்பு கூறியுள்ளது.

இந்திய அணி தென்னாப்பிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர் டிசம்பர் 26 அன்றும் ஒருநாள் தொடர் ஜனவரி 19 அன்றும் தொடங்குகின்றன. ஒருநாள் தொடருக்கு தலைவராகவும் டெஸ்ட் தொடருக்கு துணை தலைவராகவும் ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாப்பிரிக்க டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் மும்பையில் மூன்று நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். டிசம்பர் 16 அன்று மும்பையிலிருந்து தனி விமானம் மூலமாகத் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்கிறது.

மும்பையில் வலைப்பயிற்சியில் ஈடுபட்டபோது ரோஹித் சர்மாவுக்குக் காயம் ஏற்பட்டது. இதனால் டெஸ்ட் தொடரிலிருந்து அவர் விலகியுள்ளதாக பிசிசிஐ அறிவித்துள்ளது. ரோஹித்துக்குப் பதிலாக ப்ரியங் பஞ்சால், இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தொடருக்கு அடுத்து விளையாடவுள்ள ஒருநாள் தொடரிலிருந்து விராட் கோலி விலகவுள்ளதாக தகவல்கள் வெளியாகின. தனது மகள் வாமிகாவின் முதல் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக இந்தியாவுக்குத் திரும்பவுள்ளதால் ஒருநாள் தொடரிலிருந்து விலகும் முடிவை கோலி எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

கோலியின் மகள் வாமிகா, கடந்த வருடம் ஜனவரி 11 அன்று பிறந்தார். தெ.ஆ. டெஸ்ட் தொடரின் கடைசி டெஸ்ட், ஜனவரி 11 அன்று தொடங்குகிறது. ஒருநாள் தொடர் ஜனவரி 19 அன்று தொடங்குகிறது. தெ.ஆ. ஒருநாள் தொடருக்கான இந்திய அணி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

கோலி விலகல் தொடர்பான தகவல் வெளியான பிறகு, குடும்பத்துடன் நேரம் செலவழிப்பதற்காக ஒருநாள் தொடரிலிருந்து விராட் கோலி விலகவேண்டுமா, இந்திய அணி மீது அவருக்கு அக்கறை இல்லையா என ரசிகர்கள் பலரும் சமூகவலைத்தளங்களில் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இதையடுத்து, கோலி விலகல் தொடர்பாக பிசிசிஐ தரப்பிலிருந்து புதிய தகவல் வெளியாகியுள்ளது. சொந்தக் காரணங்களுக்காக ஒருநாள் தொடரிலிருந்து விலகப் போவதாக விராட் கோலியிடமிருந்து எந்தவொரு கோரிக்கையும் எழவில்லை. இதற்குப் பிறகு அவர் முடிவெடுத்தாலோ, காயம் காரணமாக விலகினாலோ அது வேறு விஷயம் என்று கோலி விவகாரம் தொடர்பாக பிசிசிஐ தரப்பு பதில் அளித்துள்ளதாக பி.டி.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.




## மாரடோனாவின் 20 லட்சம் மதிப்பு கைக்கடிகாரம் திருட்டு!

கால்பந்து விளையாட்டில் உலகப் புகழ்பெற்று விளங்கிய ஆர்ஜென்டினா முன்னாள் வீரர் டியேகோ மாரடோனாவின் களவுபோன கைக்கடிகாரம் அஸ்ஸாமில் மீட்கப்பட்டது. இதுதொடர்பாக ஒருவரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து அஸ்ஸாம் காவல்துறையினர் கூறுகையில், "ஐக்கிய அரபு அமீரகம் துபையில் உள்ள தனியார் நிறுவனம் மாரடோனாவின் உடைமைகளை பராமரித்து வருகிறது. இந்த நிறுவனத்திலிருந்து மாரடோனாவின் ரூ.20 லட்சம் மதிப்பிலான உப்லோ கைக்கடிகாரம் திருடப்பட்டது.



அதனை அந்த நிறுவனத்தில் காவலாளியாக பணிபுரிந்து வந்த வாஜித் உசேன் என்பவர் திருடிச் சென்றதாக சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலம் தகவல் கிடைத்தது. இங்குள்ள சிவசாகர் மாவட்டத்தைச் சேர்ந்த அவர், தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லையெனக் கூறி விடுப்பில் ஊர் திரும்பியுள்ளார். அவர் சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து மாரடோனாவின் கைக்கடிகாரம் மீட்கப்பட்டது" என்று தெரிவித்தனர்.



# உலக பார்வை



## பெண்களின் திருமண வயதை 21 ஆக உயர்த்த இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பெண்களின் திருமண வயதை 21 ஆக உயர்த்தும் பரிந்துரைக்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியாவில் பெண்களின் குறைந்தபட்ச திருமண வயது தற்போது 18 ஆக உள்ளது. ஆண்களுக்கு 21ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18 இல் இருந்து 21 ஆக உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு இந்திய சுதந்திர தின உரையின்போது பேசிய பிரதமர் மோடி, 'மகள்கள் மற்றும் சகோதரிகளின் உடல்நலம் குறித்து அரசு அக்கறை கொண்டுள்ளது. ஊட்டச்சத்து குறைபாட்டில் இருந்து இந்திய மகள்களை பாதுகாக்க அவர்கள் சரியான நேரத்தில் திருமணம் செய்துகொள்வது அவசியம். பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை உயர்த்த திட்டமிட்டுள்ளோம்' என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, நிதி ஆயோக் சிறப்பு குழு அமைக்கப்பட்டு பெண்களின் திருமண வயதை மறு நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக்குழு பெண்களின் திருமண வயதை 18 இல் இருந்து 21ஆக உயர்த்த பரிந்துரை செய்தது. இந்த நிலையில், இந்த பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனால், பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 21 ஆக உயர்த்தும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளதுடன், பின்னர் அது சட்டமாக அமுலுக்கு வரும்.



## இங்கிலாந்தில் கொவிட் அனுமதி அட்டை கட்டாயம்

இங்கிலாந்தில் கொவிட் அனுமதி அட்டை நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்ஸனின் இந்தத் திட்டம் மீதான வாக்கெடுப்பில், அவரது கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த சுமார் 100 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்த போதிலும், தொழிற்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.


இதனையடுத்து, இரவு நேர களியாட்ட நிலையங்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பாரிய நிகழ்வுகளுக்குச் செல்வதற்கு வயது வந்தோரிடம் கொவிட் அனுமதி அட்டை இருக்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இரு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டதற்கான அட்டை அல்லது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட °ஊசு பரிசோதனையில், தொற்றில்லையென்ற சான்றிதழ் ஆகியவற்றில் ஒன்றை கொவிட் அனுமதி அட்டையாகப் பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கென்யாவில் கடும் வறட்சியால் உயிரிழக்கும் வனவிலங்குகள்

கென்யாவில் கடும் வறட்சி காரணமாக வனவிலங்குகள் உயிரிழப்பது அதிகரித்துள்ளது. இவ்வாண்டு மழைப்பொழிவு குறைந்ததால் அங்கு கடும் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக வடக்கு கென்யாவின் வஜிப் , அல் ஜசீரா போன்ற பகுதிகளில் செப்டம்பர் மாத மழை 30 சதவீதத்திற்கும் குறைவாக பெய்திருப்பதால், அப்பகுதி சார்ந்த வனங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் , பல வன உயிரினங்கள் நீர் , உணவு கிடைக்காமல் உயிரிழந்து வருகின்றன. இந்த நிலையில், சமீபத்தில் இணையத்தில் கென்யாவின் வஜீர் வனப்பகுதியில் வறட்சியால் உணவில்லாமல் இறந்து கிடந்த 6 ஒட்டகச்சிவிங்கிகளின் புகைப்படங்கள் வெளியாகி சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



## பிலிப்பைன்ஸைத் தாக்கிய மிக சக்திவாய்ந்த சூறாவளி

இந்த ஆண்டு பிலிப்பைன்ஸைத் தாக்கிய மிக சக்திவாய்ந்த வெப்பமண்டல புயல்களில் ஒன்றான உள்ளூரில் ஒடெட் என்று அழைக்கப்படும் சுப்பர் சூறாவளி ராய், தென்கிழக்கு ஆசிய நாட்டின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளை தாக்கிய பின்னர் பலவீனமடைந்துள்ளது. இப் புயலினால், இதுவரை ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், ஆயிரக்கணக்கான மக்கள் நிவாரண முகாம்களில் தஞ்சமடைய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்த ஆண்டு பிலிப்பைன்ஸைத் தாக்கும் 15வது சூறாவளியான ராய், கனமழை மற்றும் பரவலான வெள்ளத்தைக் கொண்டு வந்தது. இதனால், டசன் கணக்கான விமானங்கள் இரத்து செய்யப்பட்டது. மேலும் பல துறைமுகங்களில் செயற்பாடுகள் முடங்கியுள்ளன. இதனால் 4,000 பயணிகள், ஓட்டுநர்கள் மற்றும் சரக்கு உதவியாளர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

அத்துடன், புயல் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வெகுஜன தடுப்பூசி செலுத்தும் பணிகளை பிலிப்பைன்ஸ் ஒத்திவைத்தது. மத்திய கிழக்குக் கடற்கரையில் உள்ள பிரபலமான சுற்றுலா மற்றும் சர்ஃபிங் தலமான சியார்காவ் தீவில் வியாழக்கிழமை கரையைக் கடந்த பிறகு, 5ஆவது வகையிலிருந்து 3ஆவது வகை புயலாக சற்று வலுவிழந்தது. இது அன்று (வெள்ளிக்கிழமை) பிற்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் மணிக்கு 260 கிலோமீட்டர் (மணிக்கு 160 மைல்) வேகத்தில் வீசிய புயல், மணிக்கு 300 கிலோமீட்டர் (மணிக்கு 185 மைல்) வேகத்துடன் மேற்கு நோக்கி நகர்ந்து, மற்ற பாதிக்கப்பட்ட பகுதிகளில் சூரிகாவோ டெல் நோர்டே மாகாணம் மற்றும் சூரிகாவோ டெல் சுரின் சில பகுதிகளும் அடங்கும் என்று பிலிப்பைன்ஸின் தேசிய கிரிட் கார்ப்பரேஷன் தெரிவித்துள்ளது. போஹோல் மாகாணம் மற்றும் அகுசன் டெல் சுரின் சில பகுதிகளும் புயலால் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை பிலிப்பைன்ஸின் பல பகுதிகளில் தகவல் தொடர்பு மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இது மீட்பு முயற்சிகளை கடினமாக்கியது. செயலிழப்பு காரணமாக ஏற்பட்ட சேதத்தின் அளவை அதிகாரிகளால் தீர்மானிக்க முடியவில்லை. ராய் சூறாவளி, வியட்நாம் மற்றும் சீனாவின் ஹைனான் மாகாணத்தில் ஓரளவு மழையைப் பரப்பும். ஆனால் இதன் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. வானிலை அதிகாரிகளின் கூற்றுப்படி, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20 சூறாவளிகள் தீவுக்கூட்டத்தைத் தாக்குகின்றன.



## ஒமிக்ரோன்: கிறிஸ்மஸ்க்கு முன் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு வலியுறுத்தல்!




கிறிஸ்மஸ°க்கு முன்னதான காலப்பகுதியில் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு, பிரதமரும் இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரியும் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர். அன்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகசந்திப்பில், பிரதமர் பொரிஸ், பப்கள் மற்றும் உணவகங்களை மூடவில்லை என அறிவித்தார். அத்துடன், மக்கள் அங்கு செல்வதற்கு முன் கவனமாக சிந்திக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரி கிறிஸ் விட்டி, தேவையில்லாத மக்களுடன் இணைந்து பயணிக்க வேண்டாமென மக்களை வலியுறுத்தினார். ஒமிக்ரோன் முற்றிலும் தனித்துவமான வேகத்தில் நகர்கிறது என்றும், மிகப் பெரிய எண்ணிக்கையிலான நோய்த்தொற்றுகளை இங்கிலாந்து காணும் என்றும் அவர் கூறினார். பிரித்தானியாவில் நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று பாதிப்பு, உச்சத்தை எட்டிய அதே நாளில் இவர்களின் கருத்து வெளிவந்துள்ளது. 78,610 புதிய கொவிட் தொற்றுகள் பதிவாகியுள்ளன.

யாழ்.தென்மராட்சி வரணியைச்சேர்ந்த தாலிக்கொடி மற்றும் " 40 லட்சம் " பெறுமதியான நகைகளை பேருந்து தரிப்பிடத்தில். இருந்து எடுத்து உரியவர்களிடம் ஒப்படைத்த செல்வன் சியானீஸ் மதுசன்.

அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி. மதிப்பளித்தார் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள். இவருடன் வட்டார உறுப்பினர் திரு.கண்ணன் அவர்களும் சிறப்பித்திருந்தார் மனிதம் இன்னும் உயிர்வாழ்கின்றதை எடுத்துக்காட்டிய மதுசன் என்றும் வளமுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன்



வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், குறித்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.








**மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர் அமைப்பின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழல் வழங்கும் நிகழ்வும் 2021.12.12 அன்று Y.M.C.Aமண்டபம், வவுனியாவில் நடைபெற்றது.**









இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 19.12.2021 அன்று வெளியிடப்பட்டது.